Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, OCTOBER 27, 2021

புதன்கிழமை ஒக்டோபர் 27, 2021 | ஒளி: 07 கதிர் 137 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## அரசியல் பிழைப்புக்கு மீனவ குடும்ப வயிற்றில் அடிக்காதே

# சுமந்திரனுக்கு எதிராக குருநகரில் ஹர்த்தால்

### உருவ பொம்மைக்கு செருப்பு மாலை அணிவித்து, தீயிட்டு கொளுத்தினர்

■ எஸ். நிதர்ஷன், என்.ராஜ்

குருநகரில், நேற்று (26), குருநகர், வல்வெட்டித்துறை மீனவர்களால், கறுப்புக் கொடி கட்டப்பட்டு, ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

சுமந்திரனால் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட முல்லைத்தீவு தொடக்கம் பருத்தித்துறை வரையான கடல் போராட்டத்தில், உள்ளூர் இழுவைப் படகுகளை கட்டுப்படுத்த வேண்டும் என்ற கோஷத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தே, இந்த ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, குருநகர, வல்வெட்டித்துறை மீனவர்கள் ஒன்றிணைந்து, எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதோடு, குருநகர் பகுதியில் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

குருநகர் பகுதியில் அனைத்து கடைகளும் மூடப்பட்டுள்ளதோடு, பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் உருவ பொம்மையும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



## அரசாங்கத்தை விமர்சித்த
# பேராசிரியரின் பதவிகள் பறிக்கப்பட்டன



விவசாய அமைச்சில் வகித்து வந்த அனைத்து பதவிகளிலிருந்தும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீட பேராசிரியர் புத்தி மாரம்பேவை உடனடியாக நீக்குமாறு, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே அமைச்சின் செயலாளருக்கு, நேற்று (26) பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சு வெளியிட்ட அறிவித்தலிலேயே மேற்குறிப்பிட்ட விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# உண்மையை கூறியதால் பேராசிரியர் நீக்கப்பட்டார்

### ஐ.ம.ச தெரிவிப்பு: புத்திஜீவிகளை வெளியேற்றுவதாக கண்டனம்



அரசாங்கத்தின் சேதனச் செய்கை திட்டம் குறித்த உண்மைத் தகவல்களை வெளியிட்டமையினால் விவசாயக் கொள்கைப் பேரவையின் தலைவர் பேராசிரியர் புத்தி மாரம்பேவை அரசாங்கம் நீக்கியுள்ளது எனத் தெரிவித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மூத்த விவசாயத்துறை பேராசிரியரான இவர், இந்த விடயப்பரப்பில் முதன்மையான முன்னோடி அறிஞர்களில் ஒருவராகப் புகழ் பெற்றவர் என்றும் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# மதுபானம் பயன்படுத்த தொடர்ந்தும் தடை

புதிய சுகாதார ஒழுங்கு விதிகள் நேற்று முன்தினம் (25) நள்ளிரவு முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தனவின் ஆலோசனைக்கு அமைய இந்த புதிய ஒழுங்கு விதிகள் அமுலில் இருக்கும்.

அதற்கமைய, நாடளாவிய ரீதியில் இரவு 11 மணி தொடக்கம் அதிகாலை 4 மணி வரை அமுல்படுத்தப்பட்டிருந்த பயணக்கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# உள்வீட்டு பிரச்சினையால் அரசாங்கத்தில் இணையோம்



ஐக்கிய மக்கள் சக்திக்குள் பிரச்சினை இருப்பது உண்மை தான் என தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேசா விதானகே, ஆனால் எக்காரணம் கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி அரசாங்கத்துடன் இணையப் போவதில்லை என்றார்.

கொழும்பில் நேற்று (26) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# நாய்கள் எவ்வளவு குரைத்தாலும் 'தவலம்' முன்னோக்கிச் செல்லும்

### அமைச்சர் ஜோன்ஸ்டன் தெரிவிப்பு

எவ்வளவுதான் அரசாங்கத்தை விமர்சனம் செய்தாலும், முன்னெடுக்கும் பணிகளை அரசாங்கம் ஒருபோதும் கைவிடாது எனத் தெரிவித்துள்ள நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ நாய்கள் எவ்வளவு தான் குரைத்தாலும் 'தவலம்' முன்னோக்கிச் செல்லும் என்று ஊர்களில் சொல்வதை நினைவுபடுத்தினார்.

தொடர்ச்சி P2

## முல்லேரியா துப்பாக்கிச் சூட்டில்
# அங்கொட லொக்காவின் 'வலது கையாள்' பலி



முல்லேரியா தெல்கஹவத்த பிரதேசத்தில் பொலிஸ் சீருடை அணிந்திருந்த இனந்தெரியாத நபரால் நேற்று (26) அதிகாலை நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், பாதாள உலகக்குழுவின் தலைவரான அங்கொட லொக்காவின் உதவியாளர் ஒருவர் பலியாகியுள்ளதுடன்,

தொடர்ச்சி P2



# கௌதம் அதானியின் விஜயம் தனிப்பட்டது

### அரசாங்கம் விளக்கம்: ஜனாதிபதி, பிரதமரை சந்தித்தார்

■ மகேஸ்வரி விஜயனந்தன்

இலங்கையில் முதலீட்டாளர்களுக்கு உகந்த சூழலை உருவாக்குவதும், முதலீட்டாளர்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதும் அரசாங்கத்தின் பொறுப்பாகும் என தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஷ் பத்திரண, இந்திய கோடீஸ்வரர் அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி இலங்கை விஜயம் தனிப்பட்டது என்றும் அது தொடர்பில் உத்தியோகப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை என்றார்.

தொடர்ச்சி P2



## வட்டவான் இறால் வளர்ப்புத் திட்டத்தில்
# 'வாகரை பயனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கவும்'

வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் மேற்கொள்ளப்படும் வட்டவான் இறால் வளர்ப்புத் திட்டத்தில், வாகரை பிரதேச பயனாளிகளுக்கே முன்னுரிமை வழங்க வேண்டுமென, வீட்டு விலங்கு வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயன்பாடு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## யுகதனவி மின்நிலைய சர்ச்சை
# ஜே.வி.பியினால் நீதிப்பேராணை மனு

கெரவலப்பிட்டிய யுகதனவி அனல் மின்நிலையத்தின் அரசாங்கத்துக்கு சொந்தமான 40 சதவீத பங்குகளை, அமெரிக்காவை தளமாகக் கொண்ட நியூ போட்ரெஸ் எனெர்ஜி நிறுவனத்துக்கு வழங்குவதற்கான அமைச்சரவை தீர்மானத்துக்கு எதிராக, மக்கள் விடுதலை முன்னணியால் (ஜே.வி.பி) மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நீதிப்பேராணை (ரிட்) மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

தொடர்ச்சி P2



# தரம் குறைந்த உரத்தை பொறுப்பேற்க தயாரில்லை



■ மகேஸ்வரி விஜயனந்தன்

தரம் குறைந்த உரத்தைப் பொறுப்பேற்க அரசாங்கம் தயாராக இல்லையெனத் தெளிவாக சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரைவை இணை பேச்சாளருமான ரமேஸ் பத்திரண, தரம் குறைந்த உரத்தை ஏற்றி வரும் கப்பல், கொழும்புத் துறைமுகத்துக்குள் நுழைவதைத் தடுக்குமாறு துறைமுக அதிகார சழபளின் தலைவர் நிஹால் கெப்பட்டிபொலவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.


அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (26) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## புதுக்குடியிருப்பில்
# இராணுவத்தின் வசமிருந்து 7 ஏக்கர் காணிகளை விடுவிக்க ஏற்பாடு

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில், இராணுவம் வசமிருந்த 7 ஏக்கர் காணிகள், நாளை (28) விடுவிக்கப்படவுள்ளன என, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந் தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

## பாராளுமன்றத்துக்கு
# ரஞ்சன் வராதது பாரிய குறை

### சந்தித்ததன் பின்னர் மனந்நொந்தார் சஜித்

பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தற்போது பாராளுமன்றத்துக்கு வருகை தராமையானது பாரிய குறைபாடாகும் என்று தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, மோசடி, ஊழல், இலஞ்சம் ஆகிவற்றுக்கு எதிராக எப்போதும் முன்னணியில் இருக்கும் ரஞ்சன் ராமநாயக்க விரைவில் விடுதலை செய்யப்பட

தொடர்ச்சி P2

# எரிபொருள் இறக்குமதிக்கு நீண்டகாலம் ஒப்பந்தம்

எட்டு மாதகாலத்திற்கான பெற்றோல் மற்றும் டீசலை இறக்குமதி செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தத்தைவழங்குவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நேற்றுமுன்தினம் (25) கூடிய அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## பேராசிரியரின் பதவிகள் பறிக்கப்பட்டன

அதன்படி, தேசிய விவசாயக் கொள்கை, இலங்கை விவசாயத் துறை நவீனமயமாக்கல் திட்டம் மற்றும் சிறுதொழில் வியாபார கூட்டுத் திட்டம் ஆகியவற்றை உருவாக்குவதற்கான நிபுணர் குழுவின் பதவிநிலைகளில் இருந்து பேராசிரியர் நீக்கப்பட்டுள்ளார். சிஜசி ஹோல்டிங்ஸ் என்ற இரசாயன உர நிறுவனத்தின் பணிப்பாளராக பல வருடங்கள் பதவி வகித்து வந்த பேராசிரியர் மாரம்பே, களைகொல்லியான கிளைபோசேற் இறக்குமதியை இடைநிறுத்துவதற்கு கடந்த அரசாங்கம் எடுத்த தீர்மானத்துக்கு எதிராகப் பல்வேறு பிரச்சாரங்களை மேற்கொண்டதாகவும் அமைச்சின் அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதேவேளை, தற்போதைய அரசாங்கம் கொள்கை ரீதியான தீர்மானத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்திவரும் சூழலுக்கு உகந்த விவசாயத்தை விமர்சித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தை விமர்சித்து சர்ச்சைக்குரிய அறிக்கைகளை வெளியிட்டதன் மூலம் பல்கலைக்கழக சமூகம், சமூக ஆர்வலர் குழுக்கள் மற்றும் பொதுமக்களிடம் செல்வாக்குச் செலுத்தி அவர்களை அணிதிரட்டும் வகையில் பேராசிரியர் செயற்பட்டதாகவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## உண்மையை கூறியதால் பேராசிரியர் நீக்கப்பட்டார்

புத்திஜீவிகளைக் கொண்டு ஆட்சி நடத்துவோம் எனக் கூறி அதிகாரத்திற்கு வந்த ஶ்ரீலங்க பொதுஜன பெரமுன அரசாங்கம், புத்திஜீவிகள் வெளியேற்றுவது வருந்தத்தக்க விடயமாகும். இன்று அரசாங்கத்தின் கருத்துக்களுடன் உடன்படாத புத்திஜீவிகள் இராஜினாமா செய்ய அல்லது பதவியில் இருந்து நீக்கப்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் புத்தி மாரம்பே, சேதன உரங்களைப் பற்றி அறிவியல் பூர்வமாக விளக்கங்களை முன்வைத்ததோடு, இந்த தீர்மானத்தால் நாட்டில் உணவுப் பாதுகாப்பிற்கு ஏற்படும் சவால்கள் தொடர்பாக விளக்கங்களை முன்வைத்தது அறிவியல் தரவுகளின் அடிப்படையியேயாகும்.

அரசாங்கத்திற்கு கட்டுக்கதைகளே தவிர விடய அறிவியல் என்பது ஆதாரம் அல்ல என்று கோவிட் கட்டுப்படுத்தலின் போது சுட்டிக்காட்டினார்கள். இது சார்ந்து செயற்பட்ட பல நிபுணர் குழுக்களின் இராஜினாமாக்கள் மூலமும் நிரூபிக்கப்படுவது, அரசியலில் தனது கருத்துக்களுடன் உடன்படுபவர்களை மட்டுமே அரசாங்கம் அறிஞர்களாகக் கருதுகிறது என்பதையாகும்.

பேராசிரியர் புத்தி மாரம்பேவை நீக்கும் முடிவை ஐக்கிய மக்கள் சக்தியாகிய நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

புத்திஜீவிகளின் பணி நாட்டுக்கும் மக்களுக்குமான பணியாக இருக்க வேண்டும் என்றார்.

## ஜே.வி.பியினால் நீதிப்பேராணை மனு

ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுனில் ஹந்துன்நெத்தி மற்றும் வசந்த சமரசிங்க ஆகியோரே நேற்றையதினம் (26) ரிட் மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். சட்டத்தரணி சுனில் வட்டகல ஊடாகத் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனுவில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமைச்சரவை, இலங்கை மின்சார சபை, நியூ போட்ரெஸ் எனெர்ஜி பிரைவேட் லிமிடெட் உள்ளிட்ட 43 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை அமெரிக்க நிறுவனத்திடம் ஒப்படைக்கும் போது அமைச்சரவை உறுப்பினர்களுக்கு கூட அரசாங்கம் விளக்கமளிக்கவில்லை என மனுதாரர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். மேலும், சம்பந்தப்பட்ட பங்குப் பரிமாற்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி பெறப்படவில்லை என்றும், முறையான விலைமனுக்கோரல் நடைமுறைக்கு ஏற்ப உரிய பங்குகளை மாற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் மனுவில் குறிப்பிட்டுள்ளனர். செப்டெம்பர் 6ஆம் திகதி அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை இரத்துச் செய்யுமாறும், மனு மீதான விசாரணைகள் முடியும் வரை இவ்விவகாரத்தில் நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கும் வகையில் நீதிப்பேரரணை உத்தரவை பிறப்பிக்குமாறும் மனுதாரர்கள், தமது மனுவில் கோரியுள்ளனர்.

# சுமந்திரனுக்கு எதிராக குருநகரில் ஹர்த்தால்

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் சுமந்திரனுக்கு எதிரான பதாதைகளை ஏந்தி கோஷமிட்டதுடன், இறுதியாக சுமந்திரனின் உருவப் பொம்மைக்கு செருப்பு மாலை அணிவிக்கப்பட்டு பின்னர், சுமந்திரனின் உருவப் பொம்மை எரிக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள், தமிழ் இனத்தின் துரோகியான சுமந்திரனே, தமது வாழ்வாதாரமான ரோலர் படகை தடை செய்வதற்கு நீ யார் எனவும் வினவினர்.

ரோலர் படகுகளை தடை செய்தல் மற்றும் இழுவமடிப் படகுகளை தடைசெய்தல் போன்ற தனிநபர் சட்டத்தை, கொண்டு வர வேண்டிய தேவை சுமந்திரனுக்கு இல்லை எனவும், அவர்கள் கூறினர்.

தமிழ் காட்சிகள் ஒன்றுகூடி எடுக்கும் தீர்மானங்களை தாம் வரவேற்போம் எனத் தெரிவித்த பிரதிநிதிகள், ஆனால் தனிநபர் சட்டத்தை இயற்றி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அடுத்த தலைவராக சுமந்திரன் வருவதை ஏற்க முடியாது எனவும் கூறினர்.

'குருநகர், பருத்தித்துறை மீனவர்கள் ரோலர் படகுகளைப் பயன்படுத்தி, நாடா நிறுவனத்தால் வரையறுக்கப்பட்ட பகுதிகளில், மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றார்கள். இதனை தடுப்பதற்கு சுமந்திரனுக்கு எந்த அருகதையும் கிடையாது.

'தனது அரசியல் செல்வாக்கு அழிந்து போகின்ற நிலையில், மீனவர்கள் என சாதாரண மக்களை இணைத்துக் கொண்டு, தனது அரசியல் இருப்புக்காக கடலில் போராட்டம் நடத்தினார்.

'அவர் ஆரம்பித்த போராட்டம் இந்தியாவுக்கான போராட்டம். அது தனது எதிர்கால அரசியலுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் என நினைத்து உள்ளூர் ரோலர்களையும் கட்டுப்படுத்துமாறு கோஷமிட்டார்.

'போராட்டத்தில் கலந்துகொண்ட அமைப்புகளுடனும் மீனவ சமூகங்களுடனும் கலந்துரையாடி, அறிக்கைகளை விட வேண்டும். அதைவிடுத்து, தனிமனித அறிக்கை ஒட்டுமொத்த மீனவ மக்களின் அறிக்கையாக முடியாது' எனவும், அவர்கள் கூறினர்.

ரோலர் படகு மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் 10 நாள்கள் கடலில் தங்கி இருந்தால் மட்டுமே, அவர்களது குடும்பங்கள் ஒரு மாதத்துக்கு வாழ்க்கையை நடத்த முடியும் எனத் தெரிவித்த அவர்கள், ஆகவே, உங்கள் அரசியலுக்காக மீனவ மக்களின் வயிற்றில் அடிப்பதை இத்தோடு நிறுத்த வேண்டும எனவும் கூறினர்.

## இராணுவத்தின் வசமிருந்து 7 ஏக்கர் காணிகளை விடுவிக்க ஏற்பாடு

இராணுவத்தினரால் விடுவிக்கப்படும் காணிகள், அரச அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டு, பின்னர் அது உரிமையாளர்களுக்கு வழங்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், அவர் கூறியுள்ளார்.

யுத்தம் நிறைவடைந்து மக்கள் புதுக்குடியிருப்பில் மீள குடியமர்ந்த போது, புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு முன்பாகவுள்ள சுமார் 19 ஏக்கர் காணிகள், இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டு, இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தமது காணிகளை விடுவிக்கக் கோரி, கடந்த 2017ஆம் ஆண்டு மக்கள் போராட்டம் மேற்கொண்டனர். இதன் விளைவாக, ஒரு தொகுதி காணிகள் விடுவிக்கப்பட்டன.

குறித்த காணியில், இராணுவத்தினரின் 682ஆவது படைப்பிரிவு முகாம் அமைந்துள்ளது.

குறித்த முகாமை கைவேலிப் பகுதிக்கு மாற்றிவிட்டு, மிகுதி காணிகள் அனைத்தும் ஆறு மாத காலப்பகுதிக்குள் விடுவிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்ட போதும், தற்போது 7 ஏக்கர் காணிகளே, நாளை (28) விடுவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தரம் குறைந்த உரத்தை பொறுப்பேற்க தயாரில்லை

தொடர்ந்து பதிலளித்த அவர், தற்போது நாட்டின் பல மாவட்டங்களுக்கு பெருமளவிலான நெனோ திரவ உரம் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் நைட்ரஜன் போசனை உரமாக எதிர்பார்க்கப்பட்ட சேதன பசளையில் காணப்பட்ட தரம் தொடர்பான பிரச்சினை காரணமாகவே சீனாவிலிருந்து இறக்குமதி செய்ய தீர்மானித்த உரத்தை நிராகரித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

இதன் காரணமாகவே விவசாயிகள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்து நெனோ திரவ உரத்தை அவசர கொள்வனவாக இறக்குமதி செய்ய தீர்மானித்ததாகவும் தெரிவித்தார்.

இந்த உர இறக்குமதி விடயத்தில் ஏதேனும் முறைகேடுகள் இடம்பெற்றிருந்தால் அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுவதாகவும் குறித்த திரவ உரத்தின் விலை தொடர்பில் எதிர்வரும் நாள்களில் மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் நாட்டுக்கு வெளிப்படுத்தப்படும் என்றார்.

இந்த சேதனப் பசளை மற்றும் பசுமை விவசாயம் குறித்து ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் எடுத்த தீர்மானமானது, இலங்கை சந்ததி மற்றும் அவர்களின் சுகாதாரம்

## எரிபொருள் இறக்குமதிக்கு நீண்டகாலம் ஒப்பந்தம்

அதன்பிரகாரம் இவ்விரு எரிபொருள்களும் 2022.01.01 தொடக்கம் 2022.08.31 வரையான எட்டு மாதகாலத்துக்கான இறக்குமதிக்கு நீண்டகால ஒப்பந்தம் வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் அளித்துள்ளது.

2022.01.01 தொடக்கம் 2022.08.31 வரையான எட்டு மாதகாலத்திற்கான டீசல் (உயர்ந்தபட்ச சல்பர் சதவீதம் 1,137,500 + 10/- 5% பீப்பாய்கள் மற்றும் டீசல் (உயர்ந்தபட்ச சல்பர் சதவீதம் 0.001) 262,500 + 10/- 5% பீப்பாய்களை இறக்குமதி செய்வதற்காக சிங்கப்பூர் M/s Vitol Asia Pte. Ltd நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பெற்றோல் இறக்குமதி

இதேவேளை, 2022.01.01 தொடக்கம் 2022.08.31 வரையான எட்டு மாத காலத்திற்கான பெற்றோல் (92 Unl) 1,341,000 + 10/- 5% பீப்பாய்கள் மற்றும் பெற்றோல்; (95 Unl) 459,000 + 10/- 5% பீப்பாய்களை இறக்குமதி செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தத்தை வழங்குவதற்காக சிங்கப்பூர் M/s Vitol Asia Pte. Ltd நிறுவனத்திற்கு வழங்குவதற்கு அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது,

இவ்விரு யோசனைகளும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே சமர்ப்பித்துள்ளார். அவ்விரு யோசனைகளுக்குமே அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## ரஞ்சன் வராதது பாரிய குறை

வேண்டும் என்றும் தெரிவித்தார்.

அகுணகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்கு நேற்றையதினம் (26) விஜயம் மேற்கொண்டு ரஞ்சன் எம்.பியைச் சந்தித்த பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்விடயத்தைத் தெரிவித்தார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக பண மோசடி, இலஞ்சம் அல்லது பொதுச் சொத்துக்களை திருடியதாக ஒருபோதும் குற்றம் சாட்டப்படவில்லை என்றும் அவர், மக்களுக்காக தன்னிடம் இருப்பதைக் கூட தியாகம் செய்த மனிதாபிமானி என்றும் சஜித் தெரிவித்தார்.

அவர், மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் என்றும், எத்தனையோ அனர்த்தங்களின் போது துளியும் யோசிக்காமல் மக்கள் சார்பாக முன்வந்தவர் ரஞ்சன் ராமநாயக்க என்று எதிர்க்கட்சித் தலைவர் நினைவு கூர்ந்தார்.

ரஞ்சன் ராமநாயக்க உயர்கல்வியில் பட்டம் பெறும் நோக்கில் செயற்படுவதாகவும், அதற்கான சூழலை உருவாக்குவது மனிதாபிமானத்தின் பெயரால் செய்யப்பட வேண்டிய ஒன்று எனவும் சஜித் தெரிவித்தார்.

அனுதாபம், மனிதாபிமானம் மற்றும் சுகாதாரக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு ரஞ்சன் ராமநாயக்கவின் சார்பில் தலையிடுமாறு நீதியமைச்சரிடம் எதிர்க்கட்சித் தலைவர் கோரிக்கை விடுத்தார்.

ரஞ்சன் எம்.பியின் விடுதலைக்காக ஜனாதிபதியிடம் தாம் பல முறை கோரிக்கை முன்வைத்ததாகவும், அவரின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி துரிதமான தீர்மானத்தை எடுப்பார் என்று நம்புவதாகவும் குறிப்பிட்டார்.

## மதுபானம் பயன்படுத்த தொடர்ந்தும் தடை

திருமண வைபவங்களின் போது மண்டபங்களின் கொள்ளளவில் மூன்றில் ஒரு பகுதியினர் அல்லது அதிகபட்சமாக 100 பேர் கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திறந்தவெளியில் நடைபெறும் திருமண நிகழ்வுகளில் 150 பேர் வரை கலந்துகொள்ள முடியும்.

எவ்வாறாயினும், திருமண நிகழ்வுகளில் மதுபானம் பயன்படுத்துவதற்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உள்வீட்டு பிரச்சினையால் அரசாங்கத்தில் இணையோம்

தொடர்ந்து தெரிவித்த அவர்,

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகி தானும் சமிந்த வியசிறியும் அரசாங்கத்துடன் இணையப் போவதாக வெளிவரும் செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லை. சில தினங்களுக்கு முன்னர் நாம் இருவரும் எமது ஆசன அமைப்பாளர் பதவியிலிருந்து விலகுவதாக கட்சியின் பொது செயலாளருக்கு அறிவித்தோம். ஆனால் அவருக்கு மாத்திரம் அனுப்பிய விடயம் எவ்வாறு ஊடகங்களுக்கு சென்றது என தெரியவில்லை என்றார்.

இதனை அடிப்படையாக வைத்து பல்வேறு விடயங்களை முன்னெடுக்க கட்சிக்குள் சிலர் செயற்படுகின்றனர் என தெரிவித்த அவர், இவ்வாறான நபர்கள் குறித்து கண்டுபிடித்து நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றார். இன்றைய தினத்தில் தான் நல்லாட்சியில் 52 நாள் அரசியல் சூழ்ச்சி இடம்பெற்றது. இதன்போது என்னையும் சமிந்த விஜயசிறியையும் விலை பேசுவதற்காக பணத்துடன் வாகனங்களில் வந்தனர்.

## நாய்கள் எவ்வளவு குரைத்தாலும் 'தவலம்' முன்னோக்கிச் செல்லும்

"எமது அரசாங்கம் மிகவும் அமைதியான அரசாங்கம், எமது ஜனாதிபதியும் அமைதியான தலைவர் " என்றார்.

கோபுரத்தின் மேல் செல்லும் துறைமுக பிரவேச அதிவேக நெடுஞ்சாலை பணிகளை ஆரம்பித்து வைத்ததன் பின்னர், அங்கு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நல்லாட்சி யுகத்தில் நாங்கள் ஓரளவு பின்னோக்கி செல்ல நேரிட்டது. மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்த திட்டங்களை குரோதம், பொறாமை காரணமாக நல்லாட்சி அரசாங்கம் நிறுத்தியது. அவ்வாறு நடந்திருக்காவிட்டால் துறைமுக நகரம் திறக்கப்பட்டிருக்கும் என்றார்.

கொவிட் தொற்று நெருக்கடி காரணமாக மக்களின் உயிர்களை காப்பாற்ற மாத்திரமன்றி அபிவிருத்தித் திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டது.

## கௌதம் அதானியின் விஜயம் தனிப்பட்டது

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (26) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

வெளிநாட்டு முதலீடு என்பது எமது நாட்டுக்கு அவசியமானதாகும்.. நாம் எதிர்நோக்கும் டொலர் பிரச்சினைக்கு தீர்வாக வெளிநாட்டு முதலீடுகள் இலங்கைக்கு கொண்டுவரப்பட வேண்டும். உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது, முதலீட்டாளர்கள் மிகக் குறைந்தளவு வருகை தரும் நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது. அந்த நிலை மாற்றப்பட வேண்டும் என்றார். அதற்கமையவே. நாட்டில் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் குறித்து அதானி நிறுவனம் விசாரித்து வருவதாக எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. கொழும்பு துறைமுக மேற்கு முனைய அபிவிருத்தி திட்டத்தில் முதலீடு செய்வதில் அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர். அது உட்பட இலங்கையின் ஏனைய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து விசாரிக்க அவர்கள் இலங்கை வந்திருக்கலாம் என்றார்.

## அங்கொட லொக்காவின் 'வலது கையாள்' பலி

மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் 34 வயதான மிலிந்த என்பவரே உயிரிழந்துள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், இவர், வெளிநாட்டில் வசிக்கின்ற இத்தாலி சமிந்த என்பவரின் நெருங்கிய தோழராவார் என்றும் தெரிவித்தனர். முல்லேரியா தெல்கஹவத்த பிரதேசத்திலுள்ள விஹாரைக்கு அருகில் நேற்று அதிகாலை 3 மணியளவில் வந்த இனந்தெரியாத துப்பாக்கிதாரியொருவர், மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு மிலிந்தவின் வீட்டுக்குச் சென்றுள்ளார். பின்னர், வீட்டின் கதவைத் தட்டிய துப்பாக்கிதாரி, அங்கிருந்தவர்களை எழுப்பி, துப்பாக்கிச் சூடு நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது. பொலிஸ் அதிகாரி போல உடையணிந்திருந்த துப்பாக்கிதாரியே இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், இச்சம்பவத்தில் 45 வயதுடைய நபரும் காயமடைந்துள்ளதாகத் தெரிவித்தனர்.

## 'வாகரை பயனாளிகளுக்கு முன்னுரிமை வழங்கவும்'

அத்தோடு, இறால் உற்பத்தியில் அதிகரிக்க அனைத்து உற்பத்தியாளர்களுக்கும் ஊக்குவிப்புத் திட்டம் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் சார் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் வகையில், வட்டவான் இறால் வளர்ப்புத் திட்டத்தை, கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று (26) பார்வையிட்டார். இதன்போது, அமைச்சர் டக்ளஸுடன் கலந்துரையாடலில் ஈடுபட்ட போதே, இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட்டத்தில் நீர் வளம் சார்ந்த பிரதேசங்களில் மீன் வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்புத் திட்டங்கள் அதிகரிப்பது தொடர்பில், அமைச்சர் டக்ளஸிடம் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் யோசனைகளையும் முன்வைத்தார். வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வட்டவான் மற்றும் பனிச்சங்கேணி ஆகிய பிரதேசங்கள் கடற்றொழில் மற்றும் உயிரியல் வளம் திணைக்களத்தினூடாக 100 ஏக்கர் நிலப்பரப்பில் இறால் வளர்ப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

குறித்த கள விஜயத்தில், மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பிரசாந்த் மற்றும் கடற்றொழில், நீரியல் வள திணைக்கள உயர் மட்ட அதிகாரிகளும் உடன் இருந்தனர்.

# “கட்சி முடிவெடுத்தால் வெளியேறத் தயார்”

அரசாங்கத்தில் இருந்து வெளியேறுவதற்கு கட்சி முடிவெடுத்தால் பதவிகளை துறந்துவிட்டு நாளையே வெளியேறுவதற்குத் தயாராக இருப்பதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசிலிருந்து வெளியேற வேண்டும் எனப் பலரும் கருத்துகளை தெரிவித்துவரும் நிலையிலேயே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர இதனைத் தெரியவித்தார்.

உரப்பிரச்சினை மற்றும் அதிபர், ஆசிரியர்களின் போராட்டம் ஆகியன தொடர்பாக தாம் விமர்சனங்களை முன்வைத்துவரும் நிலையில் அரசாங்கத்தில் இருந்து வெளியேறும்படி ஒருசில தரப்பினர் வலியுறுத்திவருவதாகவும் கூறினார்.

கட்சி ஒருமனதாக தீர்மானித்தால் நாளையே பதவிகளை துறந்துவிட்டு வெளியேறுவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்த மஹிந்த அமரவீர, எனினும் அத்தகையதொரு முடிவை கட்சி இன்னும் எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தில் இருந்து வெளியேறினால் கைப்பாவையாக இருக்கும் சஜித் பிரேமதஸவை ஜனாதிபதி ஆக்க முடியுமா



அல்லது தோல்வியடைந்த தலைவரான ரணிலை மீண்டும் பலப்படுத்துவதா என்ற பிரச்சினை காணப்படுவதாகவும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவரும், அமைச்சருமான மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

### அரசாங்கத்தை விட்டு வெளியேறாமல்

## புலம்புவதில் வேலையில்லை



11 பங்காளிக் கட்சிகளும் அரசாங்கத்தை விட்டு வெளியேறாமல், பிரச்சினைகள் குறித்து தொடர்ந்தும் புலம்பிக்கொண்டிருப்பதில் எந்தவித அர்த்தம் இல்லை என முன்னாள் அமைச்சர் அஜித் பி. பெரேரா குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே முன்னாள் அமைச்சர் அஜித் பி. பெரேரா இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், அரசியல் கட்சிகள் நியாயமற்ற முறையில் நடத்தப்பட்டால், அவர்கள் எப்போது வேண்டுமானாலும் அரசாங்கத்தை விட்டு வெளியேற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார். அவ்வாறு அரசாங்கத்தை விட்டு வெளியேறிய பின்னரும் அவர்களால் அரசியலில் ஈடுபட முடியும் என்றும் அஜித் பி. பெரேரா சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்துக்குள் இருக்கும் குறித்த 11 பங்காளிக் கட்சிகளும் ஊடக சந்திப்புகளில் வெளிப்படையாக பேசினாலும் அமைச்சரவை கூட்டங்களின்போது மௌனமாக இருப்பதாகவும் அஜித் பி. பெரேரா குற்றம் சாட்டினார்.

## “கொரோனாவை பரப்புவோரிடமிருந்து விலகியிருங்கள்”



கொரோனா வைரஸ் பரவலுக்கு துணைபோகும் நபர்களிடமிருந்து விலகியிருக்க வேண்டும் என விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத், நாட்டில் கொரோனா வைரஸ் பரவல் காணப்படும் நிலையில் போராட்டங்களால், ஒன்று கூடல்களால் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படாது. கொரோனா வைரஸ் பரவாது எனவும் எவராலும் கூற முடியுமா? அவ்வாறு எவராவது கூறுவார்களாக இருந்தால் அதனை நான் முற்றாக நிராகரிக்கிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு துணைபோகும் நபர்களிடமிருந்து விலகியிருந்து தங்களது தொழிற்சங்க உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.





## ரஷ்யாவில் ஷவேந்திராவுக்கு இராணுவ மரியாதை

ரஷ்ய பாதுகாப்பு படைகளின் தளபதியின் அழைப்பின் பேரில் ரஷ்யா சென்றுள்ள இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வாவுக்கு, அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சில் வைத்து சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டதோடு, மாபெரும் இராணுவ மரியாதையும் வழங்கப்பட்டுள்ளது.

## சீன சேதன பசளையை மீளாய்வு செய்ய சீனா இணக்கம்



சீன நிறுவனத்தின் சேதனப் பசளை தொடர்பில் மீளாய்வு செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாக விவசாய இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று (26) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய இராஜாங்க அமைச்சர் சஷீந்திர, சீன நிறுவனத்தின் சேதனப் பசளை தொடர்பில், இரு தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் நிறுவனமொன்றுக்கு அனுப்பி மீளாய்வுக்குட்படுத்த இணக்கம் காணப்பட்டுள்ளது என்றார்.

இலங்கையில் உள்ள ஆய்வுக் கூடங்களில் முன்னெடுக்கப்படும் ஆய்வுகளின் முடிவுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என சீன நிறுவனம் தெரிவித்துள்ளது. எனினும் இதனை சீன நிறுவனம் அழுத்தமாக அல்லாது வேண்டுகோளாகவே முன்வைத்தார்கள் எனவும் கூறினார்.

### இந்தியா – இலங்கை

## பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த கூட்டுப் பயிற்சி



இந்தியா - இலங்கை இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தும் விதமாக, இருநாட்டு கடற்படையினரும் கூட்டு பயிற்சிகளில் ஈடுபட முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்திய கடற்படைக்கு சொந்தமான ஆறு போர்க் கப்பல்கள், இலங்கைக் கடல்பகுதிக்கு வந்துள்ளன. கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுக பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள இக்கப்பல்கள், இலங்கை கடற்படை கப்பல்களுடன் எதிர்வரும் நாட்களில் பயிற்சிகளில் ஈடுபடவுள்ளன.

இது குறித்து இலங்கையில் உள்ள இந்தியாவுக்கான தூதரகம் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைக்கு இந்திய கடற்படை கப்பல்கள் வருகை தந்துள்ளன. இருதரப்பு உறவுகளின் வரலாற்றில் ஒரு மைல்கல் நிகழ்வு. இவ்வளவு கப்பல்கள் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை இதுவே முதன்முறை. இருநாட்டு கடற்படைகளும் இணைந்து மேற்கொள்ளும் இந்தப் பயிற்சி, இருதரப்பு பாதுகாப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வரும் நிலையில், அந்த நாட்டு கடல் பகுதிக்கு இந்திய கடற்படை கப்பல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது என இந்தியச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஓய்வூதியப் பிரச்சினை

## அடுத்த மாதம் வழக்கு விசாரணை

அஸ்லம் எஸ்.மௌலானா



2016ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டுவரை அரசாங்க சேவையில் இருந்து ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு மறுக்கப்பட்ட ஓய்வூதிய அதிகரிப்பை வழங்க உத்தரவிடுமாறு கோரி, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், ஓய்வூதியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கம் தாக்கல் செய்த வழக்கு அடுத்த மாதம் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள ஓய்வூதியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் உபதலைவரும் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான ஏ.எல். முகம்மட் முக்தார், கடந்த வருடம் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு கொரோனா அசாதாரண சூழ்நிலை காரணமாக நீதிமன்ற நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் நீதிமன்றில் சமர்ப்பணத்துக்காக எடுக்கப்படாமல் தள்ளி வைக்கப்பட்டிருந்தது என்றார்.

இவ்வழக்கை இந்த அமைப்பு சார்பாக சிரேஷ்ட சட்டத்தரணி சுனில் வட்டகல மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார். இவ்வழக்கின் பிரதிவாதிகளாக அமைச்சரவை அமைச்சர்கள் சிலர், பொதுநிருவாக அமைச்சின் செயலாளர், நிதி அமைச்சின் செயலாளர், ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் உள்ளிட்டோர் பெயரிடப்பட்டுள்ளனர் எனவும் கூறினார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் 2016ஆம் ஆண்டு அதிகரிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான சம்பளம் 2016 முதல் 2020 வரை 05 கட்டங்களாக வழங்கப்பட்டது. இதில் 2016 முதல் 2019 வரை ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கு 2020 ஆம் ஆண்டு வழங்கப்பட வேண்டிய அடிப்படை சம்பளத்துக்கு ஏற்றவாறு ஓய்வூதியத்தை கணிப்பிட்டு வழங்குமாறு பொது நிருவாக அமைச்சு 35/2019 ஆம் இலக்க சுற்று நிருபம் வெளியிடப்பட்டிருந்தது.

எனினும் 2019 ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் வந்த புதிய அரசு அக்கொடுப்பனவை நிறுத்தியிருந்தது. இதன் காரணமாக சுமார் 120,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் இதுவரை நாட்டின் பல பாகங்களைச் சேர்ந்த சுமார் 1900 ஓய்வூதியர்கள் மரணமடைந்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

### கொரோனாவிலிருந்து மீள

## கிராமப்புற பெண்களை உள்ளடக்கிய அணுகுமுறை?



கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்கு கிராமப்புற பெண்களை உள்ளடக்கிய அணுகுமுறையை எவ்வாறு சிறந்த முறையில் பின்பற்றுவது என்பதை கருத்தில் கொள்வது பொருத்தமானது பாராளுமன்றத்தின் பெண் உறுப்பினர்களின் ஒன்றியத்தின் தலைவர் இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்துக்கான சர்வதேச கிராமப்புற பெண்களுக்கான தினத்தையொட்டி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கிராமப்புற பெண்கள் விவசாய துறையில் பணியாற்றுகின்றனர். இலங்கைச் சனத்தொகையில் சுமார் 25 வீதமானவர்கள் விவசாயத்தில் ஈடுபடுகின்றனர். இலங்கை சனத்தொகையில் 81 வீதத்துக்கும் அதிகமானவர்கள் கிராமப்புறங்களிலேயே வசிக்கின்றனர். நாட்டிலுள்ள வறியவர்களின் 4/5 பங்கினர் கிராமப்புற துறைகளிலேயே தங்கி நிற்கின்றனர். இவர்களில் குறைந்தளவு 50 வீதமானவர்கள் பெண்களாவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமப்புற பெண்கள் எப்போதுமே நிதி ரீதியான வீழ்ச்சியின் தாக்கத்தை எதிர்கொள்கின்றனர். இது வீட்டுத்துறை வருமானம் மீது சுழற்சியடிப்படையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. பெண்கள் தமது குழந்தைகளுக்கு உணவளிப்பதற்கும் அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்கும் வீட்டு வரவு செலவுத் திட்டத்தை சமநிலைப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறவர்க ளாகவே சமூகமயமாக்கப்பட்டுள்ளனர்.

தற்பொழுது கிராமப்புற பெண்கள் அரசியலிலும் நுழைந்துள்ளனர். சட்டரீதியாக வழங்கப்பட்ட 25% கோட்டா முறை காரணமாக இது ஏற்பட்டுள்ளது. இது உண்மையில் பாராட்டத்தக்கது. பெண்களை சிறப்பாக நிலைநிறுத்த அவ்வாறான உறுதியான நடவடிக்கைகள் தேவை. இவ்வாறான கிராமப்புறப் பெண்களில் பெரும்பான்மையானவர்கள் சாதாரண கல்வி மற்றும் பொது வாழ்க்கையில் தீர்மானமெடுப்பதில் குறைத்த பங்களிப்பு கொண்டவர்களாகவே கருதப்படுகின்றனர். எனினும் அவர்கள் உள்ளூராட்சி அரசியலில் திருப்தியான பங்களிப்பை மேற்கொள்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பிணைமுறி மோசடி விவகாரம்

## சட்டமா அதிபருக்கு நோட்டீஸ்



> பிணை முறி ஏலத்தின் போது அரசுக்கு 1,500 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டில், சட்டமா அதிபரால் தனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அதி குற்றப்பத்திரத்தை இரத்து செய்யுமாறு கோரி ரவி கருணாநாயக்க, ரிட் மனு தாக்கல் செய்திருந்தார்

பிணை முறி ஏலத்தின் போது அரசுக்கு 1,500 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்ட விவகாரத்தில், தனக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அதி குற்றப்பத்திரத்தை இரத்து செய்யுமாறு கோரி, முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தாக்கல் செய்த நீதிப் பேராணை (ரிட்) மனு தொடர்பாக எதிர்வரும் 10ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு சட்டமா அதிபருக்கு நோட்டீஸ் அனுப்புமாறு மனுதாரர்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் கட்டளையிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான சோபித ராஜகருணா மற்றும் தம்மிக்க கணேபொல ஆகியோர் அடங்கிய குழாம் முன்னிலையில் இந்த ரிட் மனு, நேற்று (26) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், இந்த மனுவை பரிசீலிப்பதற்கான தினமும் நிர்ணயிக்கப்பட்டது.

2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி இலங்கை மத்திய வங்கியினால் நடத்தப்பட்ட பிணை முறி ஏலத்தின் போது அரசுக்கு 1,500 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டில், சட்டமா அதிபரால் தனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட அதி குற்றப்பத்திரத்தை இரத்து செய்யுமாறு கோரி ரவி கருணாநாயக்க, ரிட் மனு தாக்கல் செய்திருந்தார்.

அம்மனுவில், சட்டமா அதிபர், பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் அதன் தலைவர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரையின் பிரகாரம் தமக்கு எதிராக அதிகுற்றப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளதாக சட்டமா அதிபர் குறிப்பிட்டுள்ள போதும், அந்த ஆணைக்குழுவால் அத்தகைய பரிந்துரை எதுவும் செய்யப்படவில்லை என மனுதாரர் ரவி கருணாநாயக்க தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே அவ்வாறான அதி குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்வதற்கு சட்டமா அதிபருக்கு அதிகாரம் இல்லை எனவும் தமக்கு எதிரான அதி குற்றப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறும் மனுதாரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இறுதி விதைப்புக்கான

# திகதி அறிவிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மேற்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள 5 குளங்களின் இறுதி விதைப்பு, எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவுறுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழுள்ள அக்கராயன் குளம், வன்னேரிக்குளம், புதுமுறிப்புக்குளம், கரியாலை நாகபடுவான் குளம், குடமுருட்டிகுளம் ஆகிய குளங்களின் கீழ், 2021/2022 கால பயிர்செய்கை தொடர்பில்



எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர், பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை நிறைவேற்றப்பட வேண்டும் என்று, பயிர்ச்செய்கை குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்பட்டி பயிர்ச் செய்கை நடவடிக்கைகள், கடந்த மாதம் 5ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதாவது, அக்கராயன் குளத்தில் குளத்தின் கீழ், 2,887 ஏக்கர் நிலத்திலும் கரியாலை நாகபடுவான் குளத்தின் கீழ், 1,505 ஏக்கர் நிலத்திலும் குடமுருட்டி குளத்தின் கீழ், 650 ஏக்கரிலும் புதுமுறிப்புக் குளத்தின் கீழ், 985 ஏக்கர் நிலத்திலும் வன்னேரிகுளத்தின் கீழ், 363 ஏக்கரிலும் வழமைபோன்று காலபோகச் செய்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மன்னார் சென். விக்டரி விளையாட்டு மைதானத்தின் புனரமைப்பு பணிகளை, நேற்று (26), வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் ஆரம்பித்து வைத்தார். (படப்பிடிப்பு: எஸ்.றொசேரியன் லெம்பேட்)





வெடிமருந்து, கசிப்புடன் கைதானவரை

## தடுத்து வைத்து விசாரிப்பதற்கு அனுமதி

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு நகர் பகுதியில், சட்டவிரோத வெடிமருந்து மற்றும் கசிப்பபை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட நபரை, 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு, உடையார்க்கட்டு, சுதந்திரபுரம் பகுதியைச் சேர்ந்த 42 வயதான குறித்த நபர், 200 கிராம் வெடிமருந்து, 1,500 மில்லிலீற்றர் கசிப்பு என்பவற்றுடன், ஞாயிற்றுக்கிழமை (24) மாலை கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரை, நேற்று முன்தினம் (25), முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, அவரை பொலிஸ் தடுப்பு காவலில் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு, முல்லைத்தீவு பொலிஸார் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து, நீதிமன்றம் அவரை 72 மணித்தியாலங்கள் பொலிஸ் காவலில் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி வழங்கியுள்ளது.

இரணைதீவில் நாய்களால்

## கால்நடைகள் அழியும் நிலை ஏற்படும்

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி - பூநகரி, இரணைதீவு பகுதியில், நாய்களால் கால்நடைகள் உயிரிழந்து வருவதாக, பூநகரி பிரதேச சபையின் உப தவிசாளர் மு.எமிலியாம்பிள்ளை தெரிவித்தார்.

இவ்வாறு நாய்களால் கால்நடைகள் உயிரிழக்குமானால், எதிர்காலத்தில், இரணைதீவில் கால்நடைகள் அழிவதற்கான வழிகள் உருவாகும் எனவும், அவர் எச்சரித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், இரணைதீவில் பெருமளவு கால்நடைகள் உள்ளன எனவும் இதேவேளை, கடற்படையினர் பல நாய்களை வளர்த்து வருகின்றனர் எனவும் கூறினார்.

இந்த நாய்களால் கால்நடைகளுக்கு உயிரிழப்பு ஏற்படுகின்றன எனத் தெரிவித்த அவர், இது தொடர்பாக கிராம அலுவலர், கால்நடை வைத்தியர், பூநகரி பிரதேச செயலாளர் உட்பட பல அதிகாரிகளிடமும் முறைப்பாடு செய்துள்ளோம் எனவும் கூறினார்.

கடற்படை அதிகாரிகளுக்கும் இது தொடர்பாக பொது மக்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவித்த அவர், ஆனால் நாய்களால் கால்நடைகளின் உயிரிழப்பை தடுக்க முடியாது உள்ளது எனவும் கூறினார்.

காணி உரிமையாளர்களுக்கான அறிவுறுத்தல்

## காணி உரிமையாளர்களுக்கு அறிவுறுத்தல்

■ நடராசா கிருஸ்ணகுமார்



வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில், நீண்ட காலமாக, துப்புரவு செய்யப்படாத காணிகளை துப்புரவு செய்யுமாறு, பிரதேச செயலகத்தால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

துப்புரவு செய்யப்படாதுள்ள காணிகளின் உரிமையாளர்களின் பெயர் விவரங்கள் கிராம அலுவலர் அலுவலகங்களிலும் முக்கிய இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, பிரதேச செயலகத்தின் அறிவித்தலை ஏற்றுக்கொண்ட பல காணிகளின் உரிமையாளர்கள், தமது காணிகளைத் துப்புரவு செய்து பயிர்ச்செய்கை நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், காணிகளைத் துப்புரவு செய்து, பயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்ற குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் நடைமுறைக்கேற்ப உதவிகளை வழங்க வேண்டும் எனவும் பயிர்ச் செய்கைக்கான விதைகளை பெற்றுக் கொடுப்பதற்காவது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், காணிகளைத் துப்புரவு செய்கின்ற குடும்பங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

மன்னாரில் பெரும் போகத்துக்கான

## முதலாவது நீர் விநியோகம் ஆரம்பம்

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில், 2021, 2022ஆம் ஆண்டுக்கான பெரும்போக பயிர்ச்செய்கைக்கான முதலாவது நீர் விநியோகம், நேற்று (26) காலை 10.30 மணியளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில், பெரும் போகத்துக்காக 31,339 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படவுள்ள நிலையிலேயே, முதலாவது நீர் விநியோகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



வடமாகாணத்தில், 2ஆவது பெரியகுளமான முருகன் கட்டுக்கரைக் குளம், 11ஆம் கட்டைதுருசு பகுதியில் இடம்பெற்ற இந்நிகழ்வில், சர்வமதத் தலைவர்களின் ஆசியுடன் நீர் திறந்து விடப்பட்டது. இதன்போது, மன்னார் மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் என்.யோகராஜா, முருங்கன் கட்டுக்கரைக் குளம் நீர்ப்பாசனப் பொறியியலாளர் பி. அருள் ராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தற்போது கட்டுக்கரைக் குளத்தில், 9 அடி நீர் காணப்படுகிறது. மேலும் கட்டுக்கரைக் குளத்துக்கு நீர்வரத்து காணப்படுகின்றது. கடந்த 14ஆம் திகதியன்று, மாவட்டச் செயலாளர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு அமையவே, முதலாவது நீர் விநியோகமானது, நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யானைகளின் அச்சுறுத்தலால்

# திணறும் அம்பாறை

## யானை வேலி அமைத்தல் தொடர்பில் உயர்மட்டம் கூடியது

■ நூருல் ஹுதா உமர்

கல்முனை பிராந்தியத்தில் அதிகரித்துவரும் யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தி, பொதுமக்களின் உடமைகளையும் சொத்துகளையும் பாதுகாக்கும் நோக்கில், யானைவேலி அமைத்தல் தொடர்பிலான உயர்மட்டக் கலந்துரையாடல், நேற்று (26) நடைபெற்றது.



அம்பாறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில், வன ஜீவராசிகள் வளங்கள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவின் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெற்றது.

இதன்போது, இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்கவுக்கு, திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் விளக்கமளித்து, உடனடியாக அந்த வேலிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

சம்மாந்துறை, மாவடிப்பள்ளி, சாய்ந்தமருது பொலிவேரியன் சுனாமி வீட்டுத்திட்டம், கல்முனை கிரீன் பீல்ட் சுனாமி வீட்டுத்திட்டம், மருதமுனை பிரான்ஸ் சிட்டி சுனாமி வீட்டுத்திட்டம், குடுவில், வாங்காமம், நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்கள் அடங்களாக அம்பாறையின் ஏனைய பிரதேசங்களில் யானையின் கெடுபிடி அதிகமாக உள்ளதையும் அவர் எடுத்துரைத்து, மிக அவசரமாக யானை வேலிகளை அமைக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வனஜீவராசிகள் வளங்கள் இராஜாங்க அமைச்சர் விமலவீர திஸாநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், டொக்டர் திலக் ராஜபக்ஷ, மாவட்ட அபிவிருத்தி குழுத்தலைவர் டீ. வீரசிங்க, அம்பாறை அரசாங்க அதிபர், சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஏ.எம்.எம். நௌஸாத் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

கூலித்தொழிலியின்

## குடும்பத்துக்கு வீடு அமைப்பு

■ வா.கிருஸ்ணா, ஜல்பர்கான், வ.சக்தி

மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வறிய நிலையில் எந்த அடிப்படை வசதியும் அற்ற குடிசையில் வாழ்ந்த குடும்பம் ஒன்றுக்கு, கல் வீடு ஒன்றைக் கட்டி வழங்குவதற்கான ஏற்பாட்டை சுவிஸ் உதயம் அமைப்பு முன்னெடுத்துள்ளது.

செங்கலடி, கரடியன்குளம் பகுதியில் களிமண் வீட்டில் யானைகளின் அட்டகாசத்துக்கு மத்தியில், மூன்று குழந்தைகளுடன் வாழும் கூலித்தொழிலியின் குடும்பத்துக்கே, இந்த வீட்டைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சுவிஸ் உதயம் அமைப்பின் பிரதிநிதிகள் இப்பகுதியில் கள விஜயத்தை மேற்கொண்டபோது, மேற்படி குடும்பத்தின் நிலைமை தொடர்பான தகவல்கள் பெறப்பட்டு, சுவிஸ் உதயம் அமைப்பின் தாய்ச் சங்கத்தின் கவனத்துக்கு அவை கொண்டுவரப்பட்டன.

அதனை தொடர்ந்து, சுவிஸ் உதயம் அமைப்பின் பொருளாளர் துரைநாயகத்தின் மகனின் பிறந்த நாளை முன்னிட்டு, மகன் விஜி மற்றும் மகள் சுஜி ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் சுமார் 6 இலட்சம் ரூபாய் செலவில் இவ் வீட்டை அமைத்துக் கொடுப்பதற்கான ஆரம்ப பணிகள், நேற்று முன்தினம் (26) ஆரம்பித்துவைக்கப்பட்டன.







தைபா அரபுக் கல்லூரிக்கு

## புதிய மாணவிகள் அனுமதி

■ அஸ்லம் எஸ்.மௌலானா

சாய்ந்தமருது தைபா மகளிர் அரபுக் கல்லூரிக்கு 2021/2022 கல்வி ஆண்டுக்கான புதிய மாணவிகளை சேர்த்துக் கொள்வதற்குரிய ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக கல்லூரி அதிபர் எஸ்.எச்.ஆதம்பாவா மதனி தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ள நிலையில், புதிய மாணவிகள் அனுமதிக்கான நேர்முகப் பரீட்சை, எதிர்வரும் நவம்பர் 06ஆம் திகதி சாய்ந்தமருது பொலிவேரியன் நகரில் அமைந்துள்ள கல்லூரியின் நிர்வாக காரியாலயத்தில் நடைபெறவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை க.பொ.த சாதாரண தரப் பரீட்சை எழுதிய அல்-குர்ஆனை நன்கு ஓதத் தெரிந்த மாணவிகள் நேர்முகப்பரீட்சையில் பங்குபற்ற முடியும்.

இக்கல்லூரியில் மௌலவியா பட்டத்துக்கான இஸ்லாமிய கற்கை நெறி போதிக்கப்படுவதுடன் க.பொ.த உயர் தரப் பரீட்சைக்கும் மாணவிகள் தயார்படுத்தப்படுகின்றனர்.

## 'ஏறாவூர் பொது சந்தையை சீரமைக்கவும்' ஆளுநர் பணிப்பு

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்



1990ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்த சூழ்நிலைக்குப் பின்னர் சிதைவடைந்து வரும் ஏறாவூர் பொதுச் சந்தையை உடனடியாக சீரமைக்க நடவடிக்கை எடுக்குமாறு, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யுஹம்பத், ஏறாவூர் நகர சபையைக் கேட்டுக் கொண்டுள்ளதாக, அந்நகர சபையின் தவிசாளர் எம்.எஸ். நழீம் தெரிவித்தார்.

ஏறாவூர் நகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம், அச்சபையின் மாநாட்டு மண்டபத்தில் நேற்று (26) இடம்பெற்றது.

கூட்டத்துக்கு தலைமை தாங்கி உரையாற்றிய தவிசாளர் நழீம் மேலும் தெரிவிக்கையில், "ஏறாவூர் பொதுச் சந்தைதையைப் புனரமைத்துப் பராமரிக்குமாறு ஆளுநர் கேட்டுக் கொண்டதற்கிணங்க உடனடியாக அங்கு சிரமதானப் பணி இடம்பெறவுள்ளது.

"இந்தச் சந்தை விவகாரம் சம்பந்தமாக ஆளுநருக்குத் தெளிவுபடுத்தப்பட்டதன் அடிப்படையில், உடனடியாக அந்த பொதுச் சந்தையை இயங்க வைக்கத் தேவையான நிதியைப் பெற்றுத் தருவதாக ஆளுநர் உறுதியளித்துள்ளார்.


எப்போதும் பூட்டிக்கிடக்கும் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தால்

# கிரிமெட்டிய மக்களுக்கு அசௌகரியம்

கிரிமெட்டிய 476A கிராம அலுவலர் பிரிவு அலுவலகமானது, எந்நேரமும் பூட்டிய நிலையில் காணப்படுவதால், கர்லிபெக், தம்பகஸ்தலாவ, எவோக்கா , கிரிமெட்டிய, டெஸ்போர்ட்B, டெஸ்போர்ட்A ஆகிய 6 தோட்டங்களை சேர்ந்தவர்களும் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

குறித்த கிராம உத்தியோகத்தர் அலுவலகத்துக்கு, புதிதாக நியமனம் பெற்றுள்ள உத்தியோகத்தர், மஸ்கெலியாவிலிருந்து வருகைத் தருவதால் உரிய நேரத்துக்கு அவர் அலுவலகத்துக்கு சமூகமளிப்பதில்லை.

அவர் அலுவலகத்துக்கு வருகை தந்தாலும் சுமார் 1 மணித்தியாலமே அலுவலகத்தில் இருப்பதாகவும் குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.



குறித்த கிராம உத்தியாகத்தர் இரண்டு வருடத்திற்கு மேலாக, கிரிமெட்டிய கிராமசேவகர் பிரிவில் கடமையாற்றி வருகின்றார். எனினும் எந்தவிதமான அபிவிருத்தி வேலைகளும் பொது மக்களுக்கு நன்மை பயக்கும் எந்தவிதமான சேவைகளையும் அவர் செய்து கொடுக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவருக்கு எதிராக நானுஓயா பொலிஸ் பிரிவில் பல்வேறு முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதுடன், மத்திய மாகாண ஆளுநரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே மக்களுக்குச் சேவையாற்ற வேண்டிய இவ்வாறான கிராம உத்தியோகத்தர்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

ஹாலிஎல– குயின்ஸ்டவுன் மைதானத்தில்

# மாபெரும் கால்பந்தாட்ட சுற்றுபோட்டி

■ நீலமேகம் பிரசாந்த்

ஹாலி -எல குயின்ஸ்டவுன் மைதானத்தில், நவம்பர் 06ம் திகதி மாபெரும் கால்பந்தாட்ட சுற்றுபோட்டி ஒன்றை நடாத்த, குயின்ஸ்டவுன் விளையாட்டு கழகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பதுளை மாவட்ட கிரிக்கட் எசோசியேஷன் செயலாளரும் சமூக சேவையாளருமான பகி பாலச்சந்திரன் வழிகாட்டலில், குயின்ஸ்டவுன் விளையாட்டு கழகத்திற்கான புதிய கட்டிடமொன்று அமைப்பதற்கான தொடக்கபணியும் தீபாவளி திருநாளை முன்னிட்டு, மலையக கால்பந்து அணிகளுக்கான கால்பந்து சுற்றுபோட்டியும் எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதி காலை 8.00 மணியளவில் குயின்ஸ்டவுன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுவதற்கு சகல ஏற்பாடுகளும் நடந்து வருகிறது.

6 பேர் கொண்ட மலையக அணிகள் மாத்திரம் இப்போட்டியில் கலந்து கொள்ளமுடியும் என்பதோடு,

**“6 பேர் கொண்ட மலையக அணிகள் மாத்திரம் இப்போட்டியில் கலந்து கொள்ளமுடியும் என்பதோடு, முதல்பரிசு 20,000 ரூபாயும் வெற்றிக்கிண்ணமும்,இரண்டாவது பரிசாக 10,000 ரூபாயும் வெற்றிக்கிண்ணமும் மூன்றாவது பரிசாக வெற்றிக்கிண்ணமும் வழங்குவற்கு போட்டி ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது**

முதல்பரிசு 20,000 ரூபாயும் வெற்றிக்கிண்ணமும்,இரண்டாவது பரிசாக 10,000 ரூபாயும் வெற்றிக்கிண்ணமும் மூன்றாவது பரிசாக வெற்றிக்கிண்ணமும் வழங்குவற்கு போட்டி ஏற்பாட்டாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சர்வதேச கால்பந்து விதிமுறைகளையும் நடுவர்களின் தீர்மானமுமே கருத்தில் கொண்டு போட்டி நடாத்தப்படுவதோடு, சுகாதார முறைகளை பின்பற்றி சகல போட்டிகளும் நடைபெறும் என்று குயின்ஸ்டவுன் விளையாட்டு கழகம் அறிவித்துள்ளது.

தெல்கஸ்தென்ன மக்கள்

# வீதிக்காக வீதியில் இறங்கினர்

■ மொஹொமட் ஆஸிக்

அக்குறணை ஏழாம் கட்டையில் இருந்து ஆரம்பிக்கும் தெல்கஸ்தென்ன வீதியை, காபட் இட்டு புனரமைப்பு செய்து தருமாறு கோரி, அப்பிரதேச மக்கள் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்தினம் (25) மாலை முன்னெடுத்தனர்.

மூன்று கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள், தினந்தோறும் பயன்படுத்தும் இந்தப் பாதை கடந்த 20 வருடங்களாக எவ்வித புனரமைப்பும் இன்றி, குன்றும் குழியுமாக காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இரண்டு வருடங்களுக்கு முன்னரும் இவ்வாறு ஆர்ப்பாட்டம் ஒன்றை, இப்பிரதேசமக்கள் மேற்கொண்ட போது, அங்கு வந்த சில அரசியல்வாதிகள் பல வாக்குறுதிகளை வழங்கினாலும், இதுவரை ஒன்றும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில், அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர், இஸ்திஹார் இமாதுஸ்தினிடம் வினவிய போது, இப் பாதையை செப்பனிடு வதற்கான ஆரம்பகட்ட வேலைகளை பூர்த்தி செய்துள்ளதாகவும் இவ்வருடத்தில் அபிவிருத்தி பணி ஆரம்பிக்க முடியும் என்றும் தெரிவித்தார்.





# நலன் விசாரிப்பு...

அண்மையில் பெய்த கடும் மழையால் பாதிக்கப்பட்ட, வலப்பனை-மேடவத்தை தோட்ட மக்களின் நலனை விசாரித்த, ஐக்கிய மக்கள் சக்தியின் வலப்பனை தொகுதி செயற்பாட்டாளரும் சட்டத்தரணியுமான ஹிரன்யா ஹேரத், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலர் உணவுகளையும் வழங்கி வைத்தார். ( பா. பாலேந்திரன்)





கினிகத்தேனை நகரில் புதிய

# தகனச்சாலைக்கான பணிகள் ஆரம்பம்

■ ரஞ்சித் ராஜபக்ஸ

அம்பகமுவ பிரதேசசபையின் கீழ் நிர்வகிக்கப்படும் கினிகத்தேனை நகரில் இதுவரை பாரிய குறையாக காணப்பட்ட தகனசச்சாலையை அமைக்கும் பணிகள், வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி ரத்னாயக்கவால் நேற்று (26) ஆரம்பித்து வைக்கப்பட்டன.

அம்பகமுவ பிரதேச சபையின் தவிசாளர் ஜயசங்க பெரேராவின் எண்ணக்கருக்கமைய, 241 மில்லியன் நிதியொதுக்கீட்டின் கீழ், கினிகத்தேனை நகரின் டெலிகொம் நிறுவனத்துக்கு அருகில் இந்த தகனச்சாலை அமைக்கப்படவுள்ளது.



இதற்கமைய, குறித்த தகனச்சாலையால் அம்பகமுவ பிரதேச சபைக்குட்பட்ட கினிகத்தேனை, நோர்ட்டன் பிரிட்ஜ், வட்டவளை மற்றும் போபிட்டிய பிரதேச மக்கள் பயனடையவுள்ளனர்.

# இந்திய உதவி உயர்ஸ்தானிகர் பதுளைக்கு விஜயம் செய்தார்

கண்டி இந்திய உதவி உயர்ஸ்தானிகர் டொக்டர் எஸ் அதிரா, பதுளை மாவட்டத்திற்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

உதவி உயர்ஸ்தானிகரை, ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினுடைய பொதுச் செயலாளருமான வடிவேல் சுரேஷ் சந்தித்து கலந்துரையாடினார்.

மலையகத்தின் எதிர்கால அபிவிருத்தி வேலைத்திட்டம் சம்பந்தமாக இதன்போது கலந்துரையாடப்பட்டது.



# தடுப்பூசி செலுத்தல்

■ சிவாணி ஸ்ரீ

இரத்தினபுரி பிரதேசத்தில் உள்ள 8 பாடசாலைகளை சேர்ந்த 16-19 மாணவர்களுக்கு நேற்று(26) ஃபைசர் தடுப்பூசிசெலுத்தப்பட்டது.

மேற்படி தடுப்பூசி செலுத்தல், இரத்தினபுரி குமர வித்தியாலய இடம்பெற்றது. அங்குச் சென்ற சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ, தடுப்பூசி ஏற்றும் செயற்றிட்டத்தை கண்காணிப்பு செய்தார்.



கட்டுகஸ்தோட்டையில் போதைப் பொருள்

# விற்பனையில் ஈடுபட்ட இருபது பேர் கைது

■ சேஹன் செனவிரத்ன

கட்டகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட விசேட நடவடிக்கையின் போது, போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட 20 பேர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனை அதிகரித்து வருவதால், குறித்த விசேட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரசிக சம்பத்தின் ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்திய உதவி உயர்ஸ்தானிகர்

# ஊவாவில் முக்கிய பிரமுகர்களுடன் சந்திப்பு

■ சுமணசிறி குணதிலக

ஊவா மாகாணத்துக்கு விஜயம் செய்துள்ள இலங்கைக்கான இந்திய உதவி உயர்ஸ்தானிகர் டொக்டர். அஜிரா எஸ், ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் ஆகியோரையும் சந்தித்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் உடனான சந்திப்பின்போது, பதுளை மாவட்டத்தின் அபிவிருத்தி பற்றிய விஷேட கலந்துரையாடல்களும் கடந்த காலங்களில் இந்திய அரசினால் வழங்கி வைக்கப்பட்ட 1990 அம்புலன்ஸ் சேவை, வீடமைப்பு உட்கட்டமைப்பு வசதிகள் போன்ற ஏனைய உதவிகளுக்கும் நன்றிகள் பகரப்பட்டன.

மேலும் கிளங்கன் வைத்தியாசலை உட்பட ஏனைய வைத்தியசாலைகள் தரமுயர்த்துவது சம்பந்தமாகவும் தொடர்ந்து பெருந்தோட்ட சுகாதார நிலைமைகளை சீர்திருத்தம் செய்து தருமாறும் மாகாணசபைத் தேர்தலை நடத்தி அதிகாரப்பரவலாக்கலை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அது மட்டுமன்றி இளைஞர் யுவதிகளுக்கான பயிற்சி பட்டறை,புலமைப்பரிசில்களை இந்திய அரசாங்கம் அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளையும் அவரிடத்தில் முன்வைக்கப்பட்டன.

தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறை நீடித்தால்

# எனது நடவடிக்கையை மாற்றுவேன்

## வடிவேல் சுரேஸ் எம்.பி எச்சரிக்கை

■ எஸ்.கணேசன்

“மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறை தொடர்ந்தால், கைதுகள் நீடித்தால் வடிவேல் சுரேஸின் நடவடிக்கையும் இனி வித்தியாசமாகவே இருக்கும் என்பதை எச்சரிக்கையுடன் கூறிவைக்க விரும்புகின்றேன்" என இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். மேலும் தெரிவித்த அவர்:

“பெருந்தோட்டக் கம்பனிகளின் அடாவடியால் பாதிக்கப்பட்டுள்ள மலையக பெருந்தோட்ட மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் தொடர்ச்சியாக அதிகரிக்கப்படுவது பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. மக்கள் வறுமையின் பிடிக்குள் சிக்கிவிடுவார்களோ என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. நிலைமை இவ்வாறிருக்கையில் அரசாங்கம்



தூங்கிக்கொண்டிருக்கின்றது. மக்களைக் காக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணத்தில் நகைச்சுவை பேசிக்கொண்டு இருக்கின்றது. பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தால்கூட மாணவர்களின் தேவைகளை பூர்த்திசெய்யமுடியாத நிலையில் பெற்றோர் உள்ளனர்.

அதேவேளை, பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள காணிகள் அபகரிக்கப்படுகின்றன. தொழிற்சங்கப் பிரச்சினைகள் பொலிஸ் நிலையம்வரை கொண்டுசெல்லப்படுகின்றன. எமது மக்கள் இவ்வாறு பாதிக்கப்படுவதை அனுமதிக்க முடியாது. எமது பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. மலையக மக்களை புறக்கணிப்பதை கண்டிக்கின்றோம். ஏனைய மக்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளும் எமது மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். என்றார்.

# சட்டம், ஒழுங்கு அச்சொட்டாகக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்க

ஏதாவது பிரச்சினைகள், முரண்பாடுகள், அடிதடிகள், போக்குவரத்து குற்றங்கள் இழைக்கப்படுமாயினும் குடும்பப் பிரச்சினைகள் உள்ளிட்டவை தொடர்பிலும், பொலிஸ் நிலையத்தையே ஒவ்வொருவரும் முதலில் நாடுவர். சட்டவிரோதமான செயற்பாடுகள் தொடர்பிலும், பொலிஸ் நிலையத்துக்கே அறிவிப்பர்.

அவற்றுக்கு அப்பால், சந்தேகத்துக்கிடமான முறையில் காயங்களுடன், வைத்தியசாலைக்கு யாராவது சென்றுவிட்டால், பொலிஸ் நிலையத்துக்குச் சென்று, முறைபாட்டைப் பதிவு செய்யுமாறு வைத்தியசாலை நிர்வாகங்கள் அறிவுறுத்தவும் செய்கின்றன. ஏனென்றால், சட்டம் ஒழுங்கை பேணும் நிறுவனமே பொலிஸ் துறையாகும்.

சட்டம், ஒழுங்கை கடைப்பிடிப்பதை, பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த பலரும் அவ்வப்போது மீறிவிடுகின்றனர். சிலர் தெரியாமல் மீறிவிடுகின்றனர். இன்னும் சிலர், தெரிந்தே மீறிவிடுகின்றனர். இவர்கள், பக்குவப்படாதவர்கள். இவையெல்லாம், அவ்வப்போது இடம்பெறும் சம்பவங்களில் ஒன்றாகும்.

போக்குவரத்துப் பொலிஸாரில் பலரும், இலஞ்ச கோரிக்கைகளை முன்வைப்பதையும், வழக்குக்குச் செல்லாது, அவ்விடத்திலேயே தீர்வை பெற்றுக்கொள்வதற்காக, குற்றமிழைத்த சாரதிகளும் கைகளுக்குள் செருகிவிடுகின்றனர். சிலர் முயற்சிகளையும் மேற்கொள்வர். இவையெல்லாம் பேரம்பேசுதலுடனேயே இடம்பெறும்.

இவ்வாறான நிலையில், ஏறாவூரில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரை, போக்குவரத்து பொலிஸ் அதிகாரியொருவர், கால்களால் எட்டி உதைத்து, தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பிலான காணொளி, சமூக வலைத்தளங்களில் வைரலாகியதுடன் பொலிஸ் தலைமையத்துக்கு பெரும் தலையிடியையும் கொடுத்துள்ளது.

அச்சம்பவத்தின் சூடு தணிவதற்குள், சப்ரகமுவ மாகாணத்தில் பொலிஸ் உயர் அதிகாரியொருவர், சாரதியொருவரின் அலைபேசியை அபகரித்துக் கொண்டது மட்டுமன்றி, அடித்து வாகனத்தில் ஏற்றுவதற்கும் முயன்ற சம்பவமும் வைரலாகியுள்ளது.

இவ்விரு சம்பவங்கள் தொடர்பிலும், முறையான விசாரணைகளுக்குப் பணிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ள பொலிஸ் தலைமையகம், பொதுமக்களைச் சங்கடத்துக்குள்ளாக்கும் வகையில், பொலிஸார் செயற்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாதெனத் தெரிவித்துள்ளது.

வெயில், மழை, இராப்பகல் பார்க்காது, அயராது சேவைகளை முன்னெடுப்பதில் பொலிஸாரின் பங்கு அளப்பரியது. அதை மிச்சசொச்சமாகக் கணிக்கமுடியாது. ஆனாலும், 'ஒரு பானை சோற்றுக்கு, ஒரு சோறு பதம்' என்பதற்கிணங்க, ஓரிருவரின் செயற்பாட்டுகளால், அத்திணைக்களத்துக்கே கரி பூசப்பட்டுள்ளது.

ஒரு தரப்பினரை மட்டுமே நோக்கி, கையை நீட்டமுடியாது. மக்களும் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். ஏதாவது தவறிழைத்தால், சட்டரீதியில் அணுகுவதற்கான முறைமையைக் கையாளவேண்டும். அவ்விடத்திலிருந்து நழுவுவதற்கோ, தப்பியோடுவதற்கோ முயலக்கூடாது.

அதேபோல, பொலிஸாருக்கும் ஓரளவுக்குத்தான் பொறுமை இருக்கும். பொறுமையை இழந்துவிட்டாலும் அவர்களால் எதையும் செய்யமுடியாது. ஆகையால், பொலிஸாரின் பொறுமையைச் சோதித்து, அவர்களின் சேவைக்கு இடையூறு விளைவித்துவிடக்கூடாது. அதனை ஒவ்வொரு பொதுமகனும் கடைப்பிடிக்க வேண்டும்.

பொலிஸார் மீதான நம்பிக்கையை இன்னுமின்னும் கட்டியெழுப்பிக் காக்கவேண்டுமாயின், சட்டம், ஒழுங்கு அச்சொட்டாகக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்வதே உசிதமானது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


### பசளைப் பிரச்சினையை விளங்கிக் கொள்ளாமை:

# அரசாங்கத்தின் அறிவின்மையா, பாசாங்கா?



எம்.எஸ்.எம். ஐயூப்

பசளைத் தட்டுப்பாட்டால், தற்போது விவசாயிகள் எதிர்நோக்கி இருக்கும் பிரச்சினையை, அரசாங்கம் இன்னமும் புரிந்து கொள்ளவில்லைப் போல்த்தான் தெரிகிறது. இல்லாவிட்டால், இந்தப் பிரச்சினைக்குத் தம்மிடம் தீர்வு இல்லாததால், தாம் அதனை விளங்கிக்கொள்ளவில்லை போல், அரச தலைவர்கள் நடிப்பது ஏன்?

"எதிர்க்கட்சினர், விவசாயிகளைத் தூண்டுவதால்த்தான், அவர்கள் இரசாயனப் பசளைக் கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள்" என, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே கூறுகிறார். பசளைக் கம்பனிகள், விவசாயிகளைத் தூண்டும் அரசியல்வாதிகளுக்குப் பணம் வழங்குவதாகவும், அவர் அண்மையில் கூறியிருந்தார்.

இந்தக் கூற்று, இப்போது நீதிமன்றம் போகப் போகின்றது. மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் அகில இலங்கை விவசாய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளருமான நாமல் கருணாரத்ன, இந்தக் கூற்றைக் கூறியிருந்த மஹிந்தானந்த அலுத்கமகேக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதாகக் கூறியிருக்கிறார்.

விவசாய அமைச்சர் மட்டுமன்றி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், எதிர்க்கட்சிகள் பசளைப் பிரச்சினையைப் பாவித்து, விவசாயிகளை ஆர்ப்பாட்டம் நடத்தத் தூண்டுவதாக, கடந்த சனிக்கிழமை, குருநாகல் மாவட்டத்தில், உடுபத்தாவையில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உரையாற்றும் போது கூறியிருந்தார்.

அதேவேளை, "இரசாயனப் பசளைத் தடையை எதிர்ப்பவர்கள், அப்பசளையின் விளைவாக ஏற்படும் புற்றுநோய், சிறுநீரக நோய்களைப் பற்றிப் பேசுவதில்லை" என்றும் "இலங்கையை, சேதனப் பசளை மூலம் மட்டுமே விவசாயம் செய்யும், உலகில் ஒரே நாடாக மாற்றுவதே, எனது நோக்கம்" என்றும் அதன் மூலம் நெல்லின் விலையை, கிலோவுக்கு 150 ரூபாய் வரை அதிகரிக்கலாம் என்றும், அவர் கூறியிருந்தார்.

கடந்த சில மாதங்களாக, பசளைப் பிரச்சினையின் காரணமாக, கிராமப் பகுதிகளிலேயே, விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறார்கள். வடபகுதி விவசாயிகளும் இப்போது, இந்தப் போராட்டத்தில் இணைந்து கொண்டிருக்கிறார்கள்.

வட பகுதி மக்கள் தவிர்ந்த ஏனைய கிராமப் பகுதிகளில், மக்கள் கடந்த காலத் தேர்தல்களின் போது, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன உள்ளிட்ட, மஹிந்த ராஜபக்ஷ தலைமை தாங்கும் கட்சிளையே ஆதரித்தனர். அவர்கள், பொதுஜன பெரமுனவைக் கைவிட்டுவிட்டு, மக்கள் விடுதலை முன்னணியையோ சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியையோ ஆதரிக்க, அண்மைக் காலத்தில், அக்கட்சிகள் அவர்களுக்கு, எந்த நன்மையையும் செய்யவில்லை.

அதேவேளை, நாளை தேர்தலொன்று நடைபெற்றாலும், அவர்கள், பொதுஜன பெரமுனவுக்கே வாக்களிக்கலாம்.

அவ்வாறு இருக்க, அவ்விரு (ம.வி.மு., ஐ.ம.ச) கட்சிகளின் தூண்டுதலாலேயே, விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள் எனக் கூறுவது, விவசாயிகளின் பிரச்சினையை விளங்கிக் கொள்ளாமையாகும். அல்லது, விவசாயிகளின் பிரச்சினையால், அக்கட்சிகள் நன்மையடையப் போகின்றன என்ற அச்சத்தால், அவற்றுக்கு எதிராக மேற்கொள்ளும் அவதூறுப் பிரசாரம் ஆகும்.

சேதனப் பசளை மூலம், நெற்செய்கை மேற்கொண்டிருந்தால், ஒரு கிலோ கிராம் நெல்லின் விலை 150 ரூபாயாக அதிகரிக்கும் என, ஜனாதிபதி கூறியிருந்தார். ஐந்து கிலோ கிராம் நெல்லில் இருந்து, மூன்று கிலோ கிராம் அரிசியைப் பெற முடியும் என, விவசாய அமைச்சின் இணையத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, நெல்லின் விலை 150 ரூபாயாக உயர்ந்தால், ஒரு கிலோ கிராம் அரிசியின் விலை 250 ரூபாயாக உயரும் என்பதாகும்.

உண்மையிலேயே, பசளைத் தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் அவல நிலைமையை, தமக்குச் சாதகமான அரசியல் மூலதனமாக்கிக் கொள்ள, மக்கள் விடுதலை முன்னணியும் ஐக்கிய மக்கள் சக்தியும் முயல்வதும் தெளிவாகத் தெரிகிறது.

ஆனால், பசளைப் பிரச்சினையைத் தோற்றுவித்தவர்கள், இவ்விரு கட்சியினரே எனக்கூறுவது, நிலைமையைப் புரிந்து கொள்ளாமை அல்லது, தமது ஆற்றாமையை மூடிமறைக்கும் முயற்சி என்றே எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இது, எந்தவோர் அரசியல் கட்சியும் பின்பற்றும் நடைமுறையேயாகும். 2019 ஆம் ஆண்டு, உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதலை, தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள, பொதுஜன பெரமுனவும் கோட்டாபய ராஜபக்ஷவும் நடவடிக்கை எடுத்தமை, உலகமே அறிந்த உண்மையாகும். அந்தத் தாக்குதல் நடைபெற்று, ஆறு நாள்களில், "நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப் போகின்றேன்" எனக் கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்திருந்தார். இதனை அடுத்து, பொதுஜன பெரமுனவினர், முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் பாரியதோர் இனவாதப் பிரசாரத்தை ஆரம்பித்து, அதன் மூலம் ஜனாதிபதி தேர்தலின் போது, சிங்கள மக்களின் ஆதரவை வெகுவாகப் பெற்றமையும், சகலரும் அறிந்த விடயமாகும்.

அதனால்த்தான், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் பின்னால், பொதுஜன பெரமுனவே இருந்துள்ளது என, சில எதிர்க்கட்சியினர் கூறுகின்றனர். எனவே, விவசாயிகள் மத்தியில், கொந்தளிப்பை ஏற்படுத்தியவர்கள், எதிர்க்கட்சியினர் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

இரசாயனப் பசளை, இரசாயன கிருமி நாசினி, இரசாயன களை நாசினி போன்றவை மூலம், மண்ணும் நீரும் சுற்றாடலும், மாசுபடுகின்றன என்ற வாதம் ஏற்றுக் கொள்ளக்கூடியதே!

"நான் சிறுவனாக இருந்த காலத்தில், மண்ணில் வாழ்ந்த புழுக்கள், நீரோடைகளில் வாழ்ந்த சிறு மீன்கள் போன்றவற்றை இப்போது காண்பதற்கு இல்லை. இதற்குக் காரணம், இரசாயனப் பசளைகளையும் கிருமிநாசினிகளையும் பயன்படுத்தியமையே ஆகும்" என்று ஜனாதிபதி, தமது உரையில் தெரிவித்து இருந்தார். அதுவும் ஏற்றுக் கொள்ளக் கூடியதே!

ஆனால், பொலன்னறுவை போன்ற பகுதிகளில் பரவியிருக்கும் சிறுநீரக நோய்களுக்குக் காரணம், இரசாயனப் பசளைதான் என இன்னமும் நிரூபிக்கப்படவில்லை. நாட்டின் ஏனைய பகுதிகளிலும், இரசாயனப் பசளை, கிருமி நாசினி, களை நாசினி போன்றவை பாவிக்கப்பட்டாலும், அப்பகுதிகளில் இந்த நோய் பரவலாக இல்லை.

எவ்வாறாயினும், இரசாயனப் பொருட்களால் மண்ணும் நீரும் சுற்றாடலும் மாசுபடுவதால், இரசாயனப் பசளையைத் தவிர்க்க முடியும் என்றால், அது நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாக்க உதவும்.

ஆனால், தற்போதைய அரசாங்கம் செய்ததைப் போல், முன்னறிவித்தல் இல்லாமல், ஒரே போகத்தில், முழு நாட்டிலும் இரசாயனப் பசளை, கிருமிநாசினி, களைநாசினி ஆகியவற்றின் பாவனையை நிறுத்த முயல்வது, நாட்டில் பெரும் உணவுத் தட்டுப்பாட்டைத் தோற்றுவிக்கக் காரணமாக அமையலாம்.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர் போல் அல்லாது, தற்போது வெளிநாட்டு மரக்கறி விதைகளே நடப்படுகின்றன. அவை, இரசாயனப் பசளைக்குப் பொருத்தமாகவே உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றின் மரம், செடி, இலை ஆகியவை, இலகுவில் கிருமிகளின் தாக்குதல்களுக்கு இலக்காகின்றன. அப்போது, கிருமிநாசினிகளும் அவசியமாகின்றன.

நீண்ட கால இரசாயனப் பசளைப் பாவனையால், நாட்டின் மண்ணின் தன்மை மாறியுள்ளது. அந்த மண்ணை, ஒரே போகத்தில் வளப்படுத்த முடியாது. எனவே, வயல்களிலும் இரசாயனப் பசளையே பாவிக்க வேண்டியுள்ளது.

இதனை மாற்றியமைக்க, சில வருடங்கள் செல்லும். சேதனப் பசளையைத் தயாரிக்கக் காலம் எடுக்கிறது. அது, மண்ணை வளப்படுத்தவும் காலம் எடுக்கிறது. எனவே, அரசாங்கம் வெளியிடும் நோக்கம் நல்லதாக இருந்தாலும், அதனை ஒரே போகத்தில் செய்ய முடியாது.

அசேதனப் பசளைப் பாவனையால் மாறியிருக்கும் மண்ணில், திடீரென சேதனப் பசளை பாவனையால், பயிர்களுக்கு எவ்வாறான தாக்கத்தை, புதிதாக ஏற்படுத்தப் போகின்றது என்பது, மற்றொரு பிரச்சினையாகும். எனவே, சேதனப் பசளைப் பாவனை என்பது, பரீட்சார்த்த திட்டங்கள் மூலம், கட்டம் கட்டமாக மேற்கொள்ள வேண்டிய பணியாகும்.

உண்மையிலேயே, சுற்றாடல் பிரச்சினை காரணமாகத் தான், இரசாயனப் பசளை, கிருமிநாசினி, களைநாசினி ஆகியவற்றைத் தடைசெய்யும் அரசாங்கத்தின் திடீர் முடிவுக்குக் காரணமல்ல; நாட்டில் ஏற்பட்டு இருக்கும், வெளிநாட்டு செலாவணியில் ஏற்பட்ட பெரும் பற்றாக்குறையும் இதற்குக் காரணமாகும்.

தற்போது ஆரம்பிக்கப்பட்டு இருக்கும், பெரும் போகத்தின் போதாவது, ஏதாவது சிறந்த உரம் கிடைக்காவிட்டால், மூன்று, நான்கு மாதங்களில், நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும். அப்போது, வெளிநாடுகளில் இருந்து அரிசியையும் மரக்கறிகளையும் இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அதற்கும் வெளிநாட்டு செலாவணி அவசியமாகும்.

அதேவேளை, இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அரிசி, மரக்கறி போன்றவை, இரசாயனப் பசளை போட்டு விளைந்தவையாகவே இருக்கும். அதாவது, "இரசாயனப் பசளை வேண்டாம்" என்று, எமது விவசாயத்தை அழித்துவிட்டு, இரசாயனப் பசளை பாவித்து வளர்த்த நெல்லின் அரிசியையும் மரக்கறி வகைகளையும், இறக்குமதி செய்ய வேண்டியிருக்கும். எனவே, இந்தக் கட்டத்தில் விவசாயிகளைக் கைவிடுவதானது, அரசாங்கமும் மக்களும் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கக் காரணமாக அமையலாம்.

தற்போதைய பெரும் போகத்தின் போது, பசளை வழங்குவதாகவே, கடந்த சிறுபோகத்தின் இறுதியில் அரசாங்கம் கூறியது. அந்தப் போகத்துக்கும் போதியளவு இரசாயனப் பசளை வழங்கப்படவில்லை. இப்போது, பெரும் போகமும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அரசாங்கத்திடம், இரசாயனப் பசளையும் இல்லை; சேதனப் பசளையும் இல்லை. இது, சேதனப் பசளையின் நன்மைகளைப் பற்றிப் போதனைகளையும் விரிவுரைகளையும் நடத்தித் தீர்க்கக் கூடிய விடயமல்ல.



## வாழ்வியல் தரிசனம்

நீங்கள் உயிர்களுக்கு உணவூட்டுவதால், நீங்கள் திருப்தியுடன் சாப்பிட்ட உணர்வைப் பெறுவீர்கள். தர்மவான்கள், ஏழைகளுக்கு வழங்குவதால், பிறவிப் பயனை அடைகின்றார்கள். அன்புடன் கொடை வழங்குபவர்கள், அதுபற்றிப் பெருமை பேசுவதில்லை.

ஏழைகளே இல்லாத வையகம் வேண்டும். நம்முன்னோர்கள், தினசரி இல்லங்களுக்கு வருபவர்களை அன்பாக வரவேற்று, உணவளித்து பரவசப்பட்டனர். கூட்டுக் குடும்பமாக வாழ்ந்தவர்கள், ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாக, கௌரவத்துடன் தர்மநெறிகள் பிறழாது, மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள். உலகம் மாறும் போது, மக்களின் வாழ்வியல் நெறிகளும் முறைமைகளும் மாறிவிட்டன.

இன்றைய நிலையில், சாதாரண மக்கள் பொருளாதாரப் பிரச்சினைகளால் அவதியுறுகின்றார்கள்; அவர்களின் வாழ்வு, கேள்விக்குறியாகி உள்ளது. எப்படிக் கஷ்டப்பட்டு உழைத்தாலும், அத்தியாவசிய உணவுப் பொருட்களைக்கூட வாங்க முடியாமல் இருக்கின்றது. அரசியல்வாதிகளுக்கு இந்தப் பிரச்சினை இல்லை. பொருட்களின் விலை ஏற்றத்தால், மக்கள் தான் அலறுகின்றார்கள். ஏழைகள் துயரத்தை விவரிக்க வார்த்தைகள் இல்லை; அனைவரும் வறியவர்களுக்கு உதவும் காலம் இது!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அம்பகாமம் கிராமம்:

# மாடேறி மிதித்த கதை

முல்லைத்தீவு மாவட்டத்தின், ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட, அம்பகாமம் கிராமத்தில், காட்டு யானைகளின் தொல்லையை, அன்றாடம் எதிர் கொள்வதாக, அம்பகாமம் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்,

அம்பகாமம் கிராமத்தில், 60 க்கும் மேற்பட்ட விவசாயக் குடும்பங்கள், விவசாயத்தை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்ந்து வருகின்றன. தற்போதைய நிலையில் இவர்கள், உரம், களைநாசினி, கிருமி நாசினி ஆகியவை இல்லாத நிலையில், பெரும் இடர்பாடுகளுக்கு மத்தியில், விவசாயத்தை மேற்கொண்டு வரும் நிலையில், யானைகளின் தொல்லைகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

ஒட்டுசுட்டான், மாங்குளம் பிரதான வீதியில் இருந்து, எட்டு கிலோ மீற்றர் தொலைவில் இருக்கின்ற இந்தக் கிராமத்துக்கு, காட்டுப் பாதை ஊடாகவே, செல்ல வேண்டும். வீதியின் இருமருங்கிலும், அடர் காடுகள் காணப்படுவதால், மாலை ஆறு மணிக்குப் பின்னர், யானைகளின் அட்டகாசம் அதிகரித்துவிடும். இதனால், கிராமத்தையும் தம்மையும் பாதுகாக்கும் பொருட்டு, தமது கிராமத்தைச் சுற்றி, யானை வேலிகளை அமைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கை, பல ஆண்டுகளாகத் தொடர்ந்து முன்வைக்கப்பட்டு வருகிறது. இருந்தபோதும், மக்களின் உயிருடனும் வாழ்வாதாரத்துடனும் சம்பந்தப்பட்ட இந்த முக்கிய தேவைகள் கூட நிறைவேற்றப்படவில்லை. குறிப்பாக, காட்டு யானைகளால் ஏற்படுத்தப்படுகின்ற அழிவுகளுக்கு கூட, இழப்பீடுகள் தமக்குக் கிடைப்பதில்லை எனப் பிரதேச மக்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.

–யது பாஸ்கரன்




# அமைச்சரவைத் தீர்மானங்கள்

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று முன்தினம் (25) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில:**

## 01. காணித்துண்டொன்று வழங்கல்

விஞ்ஞானம் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம் ஹோமாகம. பிட்டிபன. மாஹேனவத்த பிரதேசத்தில் 220 ஏக்கர் காணி எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த காணியில் பல்வேறு கருத்திட்டங்களுக்காக காணித்துண்டுகள் ஒதுக்கி வழங்கப்பட்டுள்ளதுடன். உயிரியல் தொழிநுட்ப புத்தாக்கப் பூங்கா அமைப்பதற்காக அப்போதிருந்த விஞ்ஞானம். தொழிநுட்பம் மற்றும் ஆராய்ச்சிகள் அமைச்சுக்கு குறித்த காணியில் 13 ஏக்கர்கள் ஒதுக்கி வழங்கப்பட்டிருந்தாலும். குறித்த பூங்காவின் கட்டுமானப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

டிஜிட்டல் தொழிநுட்பம் மற்றும் தொழில் முயற்சிகள் தொடர்பான இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்படும் முழுமையான அரச கம்பனியான ஸ்ரீலங்கா இன்ஸ்ரிரியூட் ஒஃப் பயோடெக்னொலோஜி (பிறைவெட்) லிமிட்டட் நிறுவனம் விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப புத்தாக்கப் பூங்காவை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன். குறித்த பணிகளுக்கு மேற்குறிப்பிட்ட காணித் துண்டை ஒதுக்கி வழங்குவதற்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 02. தூய எரிசக்தி நிலைமாற்ற பிரகடனம்

ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான சாசனத்தின் தரப்பினர்களின் 26ஆவது மாநாடு 2021 ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 12 ஆம் திகதி வரை ஐக்கிய இராச்சியத்தின் ஸ்கொட்லாந்தின் க்ளாஸ்கோ நகரில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றங்கள் தொடர்பான சாசனம் மற்றும் பரிஸ் ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக மீளாய்வு செய்வதற்கும். குறித்த உடன்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கும். அமுல்படுத்துவதற்கும் தேவையான தீர்மானங்களை எட்டுவதற்கும் இம்மாநாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்மாநாட்டின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் ஐக்கிய இராச்சியம். ஐக்கிய நாடுகள் சபை மற்றும் ஏனைய அங்கத்துவ நாடுகள் சில இணைந்து. அரசாங்கங்கள் தூய எரிசக்தி நிகழ்ச்சி நிரலுக்கு அர்ப்பணிக்கும் வகையில் நிலக்கரிகளிலிருந்து விடுபட்ட தூய எரிசக்தி உடன்படிக்கையை முன்மொழிவதற்குத் திட்டமிட்டுள்ளது.

குறித்த உடன்படிக்கையில் கையொப்பமிட்ட அரசாங்கங்களுக்கு. சுற்றாடல் மாசடைவதைக் குறைப்பதற்கும் மற்றும்/அல்லது அதன் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படுத்தும் தாக்கங்களைக் குறைப்பதற்கு பொறிமுறையற்ற நிலக்கரி மின் உற்பத்தி கருத்திட்டங்களுக்குப் புதிய அனுமதிப்பத்திரங்களை வழங்குவதை உடனடியாக நிறுத்துவதற்கும். நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் மின்னுற்பத்தி செய்ய அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 03. SPMC லோட்டஸ் மருந்துகள் உற்பத்தி

ஹொரணை. மில்லாவ பிரதேசங்களில் மருந்துகள் உற்பத்தி வலயமொன்றை அமைப்பதற்காக 2021 மார்ச் மாதம் 08 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன். குறித்த கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக 65 ஏக்கர் காணித்துண்டொன்றை ஒதுக்கி வழங்குவதற்கும். கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக குழுவொன்றை நியமிப்பதற்கும்.

குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டுள்ள நடவடிக்கைக் குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் முன்மொழியப்பட்டுள்ள மருந்துகள் உற்பத்தி வலயத்தின் பெயர் 'எஸ் பீ எம் சீ லோட்டஸ் மருந்துகள் கருத்திட்டம்' (SPMC Lotus Pharma Project) எனப் பெயரிடுவதற்கும்.

சர்வதேச போட்டி விலைமனு முறையைப் பின்பற்றி கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான ஆலோசனை நிறுவனத்தை தெரிவு செய்வதற்கும். விருப்புக் கோரல்களைப் பெற்று. முறிவு மற்றும் நரம்புச் சிகிச்சை உபகரணங்கள். புற்றுநோய் தடுப்பு மருந்துகள் மற்றும் வாய் மூலம் உட்கொள்ளும் மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான 03 தொழிற்சாலைகளை துரிதமாக நிர்மாணிப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்காக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 04. மருத்துவ பீடத்தை நிர்மாணிக்கும் கருத்திட்டம்

மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தை ஆரம்பிப்பதற்கு. இதற்கு முன்னர் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளதுடன். அதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்காக அரபு பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியம் உடன்பாடு தெரிவித்துள்ளது. அதற்கமைய. முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்திற்கு 10 மில்லியன் குவைட் தினார்களை (அண்ணளவாக 33.2 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 05. கெரவலப்பிட்டியில் அமைத்தல்

இலங்கை சுங்கத் திணைக்களத்தால் தற்போது பொருட்கள் அடங்கிய கொள்கலன்களைப் பரிசோதிக்கும் நடவடிக்கைகள் ஒறுகொடவத்த மற்றும் கிராண்ட்பாஸ் பிரதேசங்களில் அமைந்துள்ள தனியார் துறைக்குச் சொந்தமான 03 வளாகங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வளாகங்களுக்கு கொள்கலன்களை ஏற்றிச் செல்லும் போது கொழும்புப் பிரதேசத்தில் அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. குறித்த நிலைமையைக் கருத்தில் கொண்டு. கெரவலப்பிட்டி அதிவேக நெடுஞ்சாலை இடமாறலுக்கு அண்மையில் இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 19 ஏக்கர்கள் மற்றும் 9.26 பேர்ச்சர்ஸ் காணியில். முன்மொழியப்பட்டுள்ள பரிசோதனை நிலையத்தை அமைத்தல் மிகவும் பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளது.

## 06. 'சிலோன் தேயிலை' புவியியல் குறிகாட்டியை பெற்றுக் கொள்ளல்

வணிகப் புலமைச்சொத்து உரிமை பற்றிய ஒப்பந்தத்திற்கமைய அங்கத்துவ நாடுகளின் தேச எல்லைக்குள் அல்லது குறித்த தேச எல்லைகளில் வலயப் பிரதேசத்தின் உற்பத்திப் பொருளை அடையாளங் காணும் அளவுகோல். புவியியல் குறிகாட்டி என அழைக்கப்படும்.

புவியியல் குறிகாட்டி மூலம் குறித்த உற்பத்தியை முறையற்ற விதத்தில் பயன்படுத்தல் அல்லது வியாபாரப் பதிவுப் பெயரைப் பிரதிமை செய்வதிலிருந்து பாதுகாப்பதுடன். உற்பத்தியின் உண்மையான பூர்வீகத்தை நுகர்வோருக்கு உறுதிப்படுத்துவதன் மூலம் நுகர்வோர் பாதுகாப்புப் பெறுவர். அதற்கமைய. 'சிலோன் தேயிலை' இற்கான புவியியல் குறிகாட்டியைப் பதிவு செய்வதற்கு ஏற்புடைய செயன்முறையை இலகுபடுத்துவதற்காக *Centre de cooperation International en Recherche Agronomique pour le Development* (CIRAD மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு (UNIDO) போன்ற நிறுவனங்கள் ஊடாக பிரான்ஸ் அரசாங்கத்தின் *Agency Francaise de Development* (AFD) இலங்கை தேயிலை சபைக்கு தொழிநுட்ப உதவிகளை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய. குறித்த பணிக்காக AFD நிறுவனம். CIRAD நிறுவனம் மற்றும் இலங்கை தேயிலை சபைக்கும் இடையிலான முத்தரப்பு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 07. இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கான டயர் விலைமனுக் கோரல்

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு 21, 600 புதிய டயர்களின் தேவைக்கான பெறுகைக்காக திறந்த போட்டி விலைமனுக் கோரப்பட்டுள்ளதுடன். அதற்காக 02 போட்டி விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய குறித்த பெறுகைக் கோரலுக்கு விபரமாக பதிலளிக்கப்பட்டுள்ள போட்டி விலை மனுதாரரான சியெட் - களனி இன்டர்நெசனல் தனியார் டயர் கம்பனிக்கு வழங்குவதற்காக போக்குவரத்து அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

## 08. மஹஎல கருத்திட்டத்தை துரிதமாகப் பூர்த்தி செய்தல்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் பத்து ஆண்டுகள் நிதியனுசரணை வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் 'மகாவலி நீர்ப் பாதுகாப்பு அபிவிருத்தி வேலைத்திட்டம்' அரசாங்கத்தின் நடுத்தரகால அபிவிருத்தி அணுகுமுறையின் கீழ் நீர்ப்பாசனம் மற்றும் குடிநீர் துறையில் பிரதான முதலீடாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. 966 மில்லியன் அமெரிக்க டொலர்கள் குறித்த திட்டத்திற்காக முதலிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தின் கீழ் வடக்கு. வடமத்திய. வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் அதிக குடிநீர் மற்றும் நீர்ப்பாசன நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வடமத்திய மாகாண மஹஎல கட்டம் 1 மற்றும் கட்டம் 2 இனை நிர்மாணிப்பதன் மூலம் மொரகஹகந்த களுகங்கை நீர்த்தேக்கங்கள் தேக்கி வைக்கப்படும் மேலதிக நீர். வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இரண்டு போகங்கள் பயிரிடுவதற்கு இயலுமை கொண்ட 73,800 ஹெக்டேயர் நீர்ப்பாசன நிலங்களுக்குப் பயன்படுத்தவும். 250,000 குடும்பங்களுக்கான குடிநீரை விநியோகிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மும்பை

# குற்றச்சாட்டுகளை மறுக்கிறார் வாங்கேடயின் தந்தை

தேசியவாத காங்கிரஸ் தலைவரும் மகாராஷ்டிர அமைச்சருமான நவாப் மாலிக் கூறிய குற்றச்சாட்டுகளை திட்டவட்டமாக மறுத்துள்ள சமீர் வாங்கேடயின் தந்தை, தனது பெயர் தனியன்தேவ், தாவூத் அல்ல என விளக்கமளித்துள்ளார்.



சொகுசு கப்பலில் என்சிபி எனப்படும் போதைப் பொருள் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் திடீர் சோதனை நடத்தினர். அங்கு நடந்த கேளிக்கை விருந்தில் போதைப் பொருள் பயன்படுத்தப்பட்டதாக நடிகர் ஷாருக் கானின் மகன் ஆர்யன் கான் உட்பட 20 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்த வழக்கில், தனியார் புலனாய்வாளர் கே.பி.கோசவி மற்றும் அவரது உதவியாளர் பிரபாகர் செய்ல் ஆகியோர் சாட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். ஆர்யன் கான் வழக்கு தொடர்பாக அவரது தந்தை ஷாருக் கானிடம் ரூ.25 கோடி பேரம் பேசினர் என பிரபாகர் செய்ல் கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனால்,இதை போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் திட்டவட்டமாக மறுத்துள்ளனர். இந்தநிலையில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் நவாப் மாலிக் போதைப் பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு அதிகாரி சமீர் வாங்கேடேயின் தனிப்பட்ட ஆவணங்களை டுவீட் செய்து அவை போலியாக தயாரிக்கப்பட்டதாக குற்றம்சாட்டியிருந்தார்.அதில் சமீர் தந்தை ஒரு முஸ்லிம் என்றும் அவரது பெயர் தாவூத் என்றும் குறிப்பிட்டு இருந்தார்.

புதுச்சேரி



# பேரனுடன் விளையாடிய முதலமைச்சர்

புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமியின் அண்ணன் ஆதிகேசவன் மகள் வசந்தியை அமைச்சர் நமச்சிவாயம் (பாஜக) திருமணம் செய்துள்ளார். எனவே,அமைச்சர் நமச்சிவாயம், முதலமைச்சர் ரங்கசாமியின் மருமகன் ஆவார். நமச்சிவாயத்தின் மகனான சிவஹரி தனது தாத்தா உறவு முறையில் உள்ள முதலமைச்சர் ரங்கசாமியுடன் எப்போதும் பேசி விளையாடுவது வழக்கம். சுமார் 14 ஆண்டுகளுக்குப் பின் வில்லியனூர் மணவெளியில் உள்ள அமைச்சர் நமச்சிவாயம் வீட்டுக்கு அவரது பிறந்தநாளையொட்டி அண்மையில் முதலமைச்சர் ரங்கசாமி சென்றிருந்தார்.

தாத்தாவை ஒவ்வொரு அறையாக அழைத்துச் சென்று வீட்டை பேரன் சிவஹரி சுற்றிக் காட்டினான். தனது அறைக்கு அழைத்து சென்று விளையாட்டுப் பொருட்களை தாத்தாவிடம் காட்டினான்.

அப்போது, 'இரண்டு ஆண்டுகளாக எங்கேயும் தன்னை அனுப்புவதில்லை' என்று தனது ஆதங்கத்தை தெரிவித்தான். அதைத் தொடர்ந்து முதலமைச்சர் ரங்கசாமியின் வீட்டுக்கு நீண்ட நாட்களுக்குப் பின் சிவஹரி அழைத்து வரப்பட்டான். பணியிருந்தாலும் அவனுடன் முதலமைச்சர் ரங்கசாமி விளையாடத் தொடங்கினார். தொடர்ந்து ரங்கசாமியும், அவரது பேரனும் டென்னிஸ் விளையாடி மகிழ்ந்தனர்.

சென்னை

# அண்ணாமலைக்கு திருமாவளவன் பதிலடி



பாஜக மீது கைவைத்தால் திராவிட முன்னேற்ற கழகத்துக்கு வட்டியும் முதலுமாக திருப்பி கொடுக்கப்படும் என பாஜக தலைவர் அண்ணாமலை எச்சரிக்கை விடுத்தார். இதற்கு திமுகவின் தோழமை கட்சியான விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் பதிலடி கொடுத்துள்ளார்.

'கவன ஈர்ப்புக்காக வாயில் வந்ததை எல்லாம் அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பாஜகவினர் உருப்படியான அரசியல் எதையும் பேசுவதில்லை. தனிநபர் விமர்சனம் செய்வதன் மூலம் அனைவரும் தங்களை கவனிக்க வேண்டும்; தங்களைப் பற்றி விவாதிக்க வேண்டும் என்ற உளவியலை கொண்டிருக்கிறார்கள். அது அவர்களின் பலவீனத்தை காட்டுகிறது' என விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் கூறினார்.

கொல்கத்தா

# பா.ஜ.க எனும் வைரஸை ஒழிக்கும் தடுப்பூசி மம்தா பானர்ஜிதான்

மேற்கு வங்காளத்தில் நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் அமோக வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்துள்ளது. ஆட்சியை பிடிக்கும் பாரதிய ஜனதாவின் கனவு தகர்ந்தது.



இந்நிலையில், மேற்கு வங்காளத்தில் காலியாக உள்ள 4 சட்டசபை தொகுதிகளுக்கு எதிர்வரும் 30ஆம் திகதி இடைத்தேர்தல் நடக்கிறது. இந்த தொகுதிகளை கைப்பற்ற பாஜக, திரிணாமுல் காங்கிரஸ் கட்சிகளிடையே கடும் போட்டி நிலவுகிறது. இரண்டு கட்சிகளும் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளன.

திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து கட்சியின் பொதுச் செயலாளர் அபிஷேக் பானர்ஜி பிரசாரம் செய்தார். பிரசார பொதுக்கூட்டத்தில், பா.ஜ.க 'ஒரு வைரஸ்' எனக் கடுமையாக விமர்சனம் செய்தார்.

மதுரை

# காமுகருக்கு சாகும் வரை சிறை

மதுரை, ஜெய்ஹிந்த்புரத்தைச் சேர்ந்த 64வயதானவர், வீடொன்றில் தனியாக இருந்த 11 வயது சிறுமிக்கு ஐஸ்கிரீம் வாங்கிக் கொடுத்து, பாலியல் ரீதியாக துன்புறுத்திய சமபவமொன்று இடம்பெற்றுள்ளது.



இவர் மீது மதுரை டவுன் மகளிர் பொலிஸார் 'போக்சோ' பிரிவில் வழக்குப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவருக்கு சாகும் வரை சிறை தண்டனை மற்றும் 60 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்தும், சிறுமிக்கு தமிழக அரசாங்கம் 10 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கவும், மதுரை போக்சோ சிறப்பு நீதிமன்ற நீதிபதி ராதிகா உத்தரவிட்டார். இவர் 2020 மார்ச் 5ஆம் திகதி வீட்டில் இருந்த 14 வயது மகளை பாலியல் பலாத்காரம் செய்தார்.

இதேவேளை,இந்த வழக்கு நாகை 'போக்சோ' சிறப்பு அமர்வு நீதிமன்றத்தில் நடந்தது. நீதிபதி தமிழரசி விசாரித்தார். அதில்,கார் சாரதிக்கு சாகும் வரை சிறை, 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 9 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க தமிழக அரசுக்கு பரிந்துரை செய்தார்.

சிவகங்கை

# 'டிபன் பொக்ஸ்' குண்டு: மூன்று மாணவர்கள் காயம்

'டிபன் பொக்ஸ்' வெடிகுண்டு வெடித்து பாடசாலை மாணவர்கள் மூன்று பேர் காயமுற்றனர். உயிருக்கு ஆபத்தான நிலையில், ஒரு மாணவன் மதுரை அரசினர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



சிவகங்கையில்,மூன்று மாணவர்களும் நேற்றுமுன்தினம் மாலை 5:00 மணிக்கு ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பாடசாலை பழைய கட்டடத்துக்குள் விளையாடினர். அங்கிருந்த அலுமாரியில் பொட்டலம் ஒன்று இருந்துள்ளது. அதை எடுத்து பாடசாலைக்கருகிலுள்ள வீதியில் வீசியுள்ளனர். அந்த பார்சல் அதிக சப்தத்துடன் வெடித்ததில் சில்வர் தகடு, ஆணிகள் சிதறின. சில்வர் தகடு மாணவனொருவரின் வயிற்றைக் கிழித்ததில் குடல் வெளியேறியது. இவரை மதுரை அரசினர் மருத்துவமனை அவசர சிகிச்சை பிரிவில் சேர்த்தனர்.

அரியாங்குப்பம்

# மனைவி மீது பொங்கியது அன்பு

கொரோனா தொற்றால் மனைவி அவதிப்படுவதால் மனமுடைந்த கணவர் வீடியோ கோலில்பேசியபடியே தனது உயிரை மாய்த்துக் கொண்ட செய்தி பெரும்அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புமனைவி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, கதிர்காமத்தில் உள்ள மருத்துவமனையில் கடந்த 15 ஆம் திகதியில் இருந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், கடந்த 20ஆம் திகதி, தனது மனைவிக்கு வீடியோ கால் மூலம் பேசினார். அப்போது, 'நீ மருத்துவமனையில் அவதிப்பட்டுவருகிறாய், நானும் வேலை இல்லாமல் கஷ்டப்படுகிறேன் என்று பேசி தொலைபேசி இணைப்பை துண்டித்து விட்டு, வீட்டில் தூக்குப் போட்டு கொண்டார்.

அதிர்ச்சியடைந்த அவரது மனைவி வீட்டுக்கு அருகில் இருந்தவர்களுக்கு தொலைபேசி மூலம் தெரிவித்தார். அக்கம் பக்கத்தினர், பாலகுருவை மீட்டு புதுச்சேரி அரசு மருத்துவமனை தீவிர சிகிச்சை பிரிவில் சேர்த்தனர்.

புதன்கிழமை 27 ஒக்டோபர் 2021 தமிழ்Mirror

பிரேஸில்

# தடுப்பூசியால் எய்ட்ஸ் வரும்

### பிரேஸில் ஜனாதிபதியின் கருத்தால் சர்ச்சை

கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டால் எய்ட்ஸ் நோய் ஏற்படும் என பிரேஸில் ஜனாதிபதி ஜெய்ர் பொல்சொனாரோ ( *Jair Bolsonaro*) தெரிவித்த கருத்து உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து பொதுமக்கள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமென்றால் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என உலக நாடுகள் அறிவுறுத்தி வருகின்றன .



எனினும் பிரேஸில் ஜனாதிபதி ஜெய்ர் பொல்சொனாரோ முகக் கவசம் அணியத் தேவையில்லை என்றும், கொரோனாத் தடுப்பூசி செலுத்துவது அவசியமற்றது எனவும் தெரிவித்து வந்தார்.

இந்நிலையில் கொரோனாத் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டால் எய்ட்ஸ் நோய் ஏற்படும் என அவர் அண்மையில் தெரிவித்த கருத்துக்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

அத்துடன் இது குறித்து உலக நாடுகளும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில் இது குறித்த வீடியோவானது பேஸ்புக்கில் வைரலாக அதனை பேஸ்புக் நிறவனம் நீக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தான்

# உணவுப் பஞ்சத்தில் தவிக்கும் ஆப்கான்

### இலட்சக்கணக்கான மக்கள் இறக்கும் அபாயம்

ஆப்கானிஸ்தானில் தற்போது தலிபான்களின் ஆட்சி இடம்பெற்று வரும் நிலையில் அந் நாட்டு மக்கள் கடுமையான உணவுப் பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், உணவுப் பொருட்களை வாங்கத் தங்களது பெறுமதியான உடைமைகளை விற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் அவசர நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால், பல இலட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் உயிரிழக்க நேரிடும் என்று ஐ.நா. எச்சரித்துள்ளது.

மேலும் உலக உணவுத் திட்ட நிர்வாக இயக்குநர், டேவிட் பீஸ்லி இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில் ”ஆப்கானிஸ்தானின் 39 மில்லியன் மக்களில் பாதிக்கு மேல் (22.8 மில்லியன்) கடுமையான உணவுப் பற்றாக்குறை மற்றும் பட்டினியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றனர். எனவே

மனிதாபிமான செயல்களுக்கான நிதியை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார்.

அமெரிக்கா

# விண்வெளியில் தொழில்நுட்ப பூங்கா



அமேசான் நிறுவனத்தின் ஸ்தாபகரும், உலகப் பணக்கார ர்களுள் ஒருவருமான ஜெப் பெசோஸ் (*Jeff Bezos*), குறைந்த கட்டணத்தில் விண்வெளிச் சுற்றுலாவைச் சாத்தியப்படுத்தும் முயற்சியில் புளூ ஒரிஜின் (*Blue Origin*) என்ற நிறுவனத்தை நடத்தி வருகின்றார்.

இந்நிலையில் குறித்த நிறுவனமானது தற்போது விண்வெளியில் தொழில்நுட்பப் பூங்கா ஒன்றை அமைக்கும் புதிய முயற்சியில் இறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஓர்பிடல் ரீப் ( *Orbital Reef*) எனப் பெயரிடப்பட்டுள்ள இத்தொழில்நுட்பப் பூங்காவை செய்ரா ஸ்பேஸ்(*Sierra Space*), ரெட் வையர் ஸ்பேஸ்( *Redwe Space*),ஜென்னிஸ் எஞ்ஜினியரிங் சொலுசன்( *Genesis Engineering Solutions* )ஆகிய நிறுவனங்கள் மற்றும் அரிசோனா(*Arizona* ) பல்கலைக்கழகத்துடன் இணைந்து அமைக்கவுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது. \

மேலும் விண்வெளி நிறுவனங்கள், விண்வெளித் திட்டங்களை செயல்படுத்த இயலாத நாடுகள், அறிவியல் கண்டுபிடிப்பாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு விண்வெளித் தொழில்நுட்பப் பூங்காவில் இடம் உள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘Squid Game’ ஐ பார்க்க சிறுவர்களை அனுமதிக்க வேண்டாம்




உலகம் முழுவதும் அமோக வரவேற்பைப் பெற்ற ஸ்குயிட் கேம்( *Squid Game*) இணையத் தொடரை பார்க்க சிறுவர்களை அனுமதிக்க கூடாது என மருத்துவர்கள் அறிவுறுத்தி வருகின்றனர்.

கடந்த மாதம் Netflix-ல் வெளியான இத் தொடரை, ஒரு மாதத்துக்குள் 11 கோடிக்கும் மேற்பட்ட சந்தாதாரர்கள் பார்த்ததால் இது வரை எந்த தொடருக்கும் கிடைக்காத வரவேற்பு இதற்கு கிடைத்துள்ளது.

எனினும்18 வயதுக்கு மேற்பட்டோருக்கான இத்தொடரில் வன்முறை நிறைந்த கோரக் காட்சிகள் அதிகம் உள்ளதால் இது சிறுவர்கள் மனதில் வன்முறை எண்ணெங்களை விளைவிக்கக் கூடும் என மன நல மருத்துவர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

எனவே இத்தொடரை பார்க்க சிறுவர்களை அனுமதிக்க கூடாது எனப் பெற்றோர்களுக்கு அவர்கள் அறிவுறுத்தி உள்ளனர். தற்போது பல்வேறு நாடுகளில் உள்ள பாடசாலைகளில் இந்த தொடரை பற்றி பேசவே தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



சூடான்

# சூடானில் ஆட்சியை கைப்பற்றிய இராணுவம்; பிரதமர், அமைச்சர்கள் கைது

சூடானில் இராணுவ ஆட்சி நடைபெற வேண்டும் என ஒரு பிரிவினரும், மக்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் ஆட்சி செய்ய வேண்டுமென மற்றொரு தரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

அந்தவகையில் கடந்த மாதம் இராணுவம் நிகழ்த்திய ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சி தோல்வி அடையவே தேர்தல் நடைபெறும் வரை பிரதமர் அப்துல்லா ஹம்தோக் தலைமையில் இடைக்கால அரசு இடம்பெற்று வந்தது.

இந்நிலையில், மக்களிடம் அதிகாரத்தை ஒப்படைக்க சில வாரங்களே இருந்த நிலையில் இராணுவம் திடீரென பிரதமர் மற்றும் அமைச்சர்களைக் கைது செய்துள்ளது.

அத்துடன் இராணுவத் தளபதி அப்தெல் பத்தா பர்ஹன் 2023ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெறும் வரை இராணுவம் ஆட்சியில் இருக்கும் என தெரிவித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து இராணுவ நடவடிக்கைக்கு எதிராக மக்கள் தெருக்களில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் போராட்டக்காரர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் 7 பேர் உயிரிழந்ததாகவும், ஏராளமானோர் காயமடைந்திருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சவுதி அரேபியா

# சவுதி மன்னரைக் கொலை செய்யத் திட்டமிட்டிருந்த இளவரசர் சல்மான்?



சவுதி மன்னர் அப்துல்லா உடல் நலக் குறைவு காரணமாக 2015 ஆம் ஆண்டு காலமானார். இந்நிலையில் ”மறைந்த சவுதி மன்னர் அப்துல்லாவை, இளவரசர் முகமது பின் சல்மான் கொலை செய்யத் திட்டமிட்டிருந்ததாக” அந்நாட்டின் முன்னாள் புலனாய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டில் சிக்கி சவுதி அரேபியாவில் இருந்து தப்பி கனடாவில் தஞ்சம் அடைந்துள்ள முன்னாள் புலனாய்வு அதிகாரியான அல்ஜாப்ரி என்பவரே பிரபல ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் ”சவுதி இளவரசர் குறித்த பல ரகசியங்கள் என்னிடம் உள்ளன. தனது தந்தையை அரியணையில் ஏற்றுவதற்காக மன்னர் அப்துல்லாவை கொல்ல இளவரசர் திட்டமிட்டிருந்தார்.

இதற்காக ரஷ்யாவிலிருந்து விஷம் பொருந்திய மோதிரமொன்றையும் வாங்கியிருந்தார். இதன் மூலம் கைகுலுக்கி மன்னரைக் கொல்லவும் அவர் தீர்மானித்திருந்தார்.

இப்போது அவர் நான் கொல்லப்பட வேண்டும் என்று நினைக்கிறார். ஏனெனில் எனது தகவல்களால் அவர் அச்சமடைகிறார். நான் நிச்சயம் ஒரு நாள் கொல்லப்படலாம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிலையில் அல் ஜாப்ரியின் குற்றச்சாட்டை மறுத்துள்ள இளவரசர் சல்மான் ”நிதி விவகாரத்தில் அவர் தவறுகளில் ஈடுபட்டதால் பணியிலிருந்து நீக்கப்பட்டதாகவும் இதன் காரணமாக இது போன்ற புகார்களை அவர் கூறிவருவதாகவும்” தெரிவித்துள்ளார்.

### இருபதுக்கு – 20 உலகக் கிண்ணம்:

# ஸ்கொட்லாந்தைச் சுருட்டிய ஆப்கானிஸ்தான்



ஐக்கிய அரபு அமீரகத்தின் சார்ஜாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஸ்கொட்லாந்துடனான குழு இரண்டு சுப்பர் 12 போட்டியில் ஆப்கானிஸ்தான் இமாலய வெற்றி பெற்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தான்: 190/4 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: நஜிபுல்லாஹ் ஸட்ரான் 59 (34), ரஹ்மனுல்லாஹ் குர்பாஸ் 46 (37), ஹஸரத்துல்லா ஸஸாய் 44 (30), மொஹமட் ஷஷாட் 22 (15), மொஹமட் நபி ஆ.இ 11 (04) ஓட்டங்கள். பந்துவீச்சு: சஃபயான் ஷரிஃப் 2/33 [4], மார்க் வட் 1/23 [4])

ஸ்கொட்லாந்து: 60/10 (10.2 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஜோர்ஜ் மன்சி 25 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: முஜீப் உர் ரஹ்மான் 5/20 [4], ரஷீட் கான் 4/9 [2.2], நவீன் உல் ஹக் 1/12 [2], கரிம் ஜனட் 0/6 [1])

போட்டியின் நாயகன்: முஜீப் உர் ரஹ்மான்

இந்நிலையில், அபு தாபியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஒன்று சுப்பர் 12 போட்டியில் பங்களாதேஷும் இங்கிலாந்தும் மோதவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள குழு இரண்டு போட்டியில் ஸ்கொட்லாந்தும், நமீபியாவும் மோதவுள்ளன.




# மோதலையடுத்து குமார, தாஸூக்கு அபராதம்



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற போட்டியில் மோதிய இலங்கை வேகப்பந்துவீச்சாளர் லஹிரு குமார, பங்களாதேஷின் துடுப்பாட்டவீரர் லிட்டன் தாஸுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் நடத்தைக் கோவையில் முதலாவது கட்டத்தை மீறியதற்காக குமாரவின் போட்டி ஊதியத்தில் 25 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், தாஸுக்கு 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அபராதங்களுக்கு மேலாக இருவருக்கும் ஒரு தண்டப் புள்ளியும் வழங்கப்பட்டுள்ளது.

### எல்.பி.எல்:

# ஜ..ஃப்னா கிங்ஸில் டு பிளெஸி, வஹாப்

லங்கா பிறீமியர் லீக்கின் ஜப்னா கிங்ஸ் அணியானது, வீரர்கள் தெரிவுக்கு முன்னதாக, தென்னாபிரிக்காவின் முன்னாள் அணித்தலைவரான பப் டு பிளெஸியை தமது ஐகான் வீரராக இணைத்துக் கொண்டுள்ளது.

இதேவேளளை, டயமன்ட் வீரராக பாகிஸ்தானின் வேகப்பந்துவீச்சாளர் வஹாப் றியாஸையும் ஜஃப்னா கிங்ஸ் இணைத்துக் கொண்டுள்ளது.

ஏற்கெனவே அணித்தலைவராக திஸர பெரேராவை ஜஃப்னா கிங்ஸ் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.பி.எல்லில் லக்னோ, அஹ்மதபாத்தில் புதிய அணிகள்



இந்தியன் பிறீமியர் லீக்கின் (ஐ.பி.எல்) புதிய இரண்டு அணிகளின் உரிமங்களை ஆர். பி.எஸ்.ஜி குழுமமும், சி.வி. சி கப்பிட்டல் பார்ட்னர்ஸும் கைப்பற்றியுள்ளன.

லக்னோவை ஆர்.பி.எஸ்.ஜி குழுமம் தெரிவு செய்த்ததுடன், அஹ்மதபாத்தை சி.வி.சி கைப்பற்றியுள்ளது.

7090 கோடி இந்திய ரூபாய்களுக்கே ஆர். பி.எஸ்.ஜி உரிமத்தைக் கைப்பற்றியதோடு, 5625 கோடி இந்திய ரூபாய்களுக்கு சி.வி.சி கைப்பற்றியிருந்தது.

இதில், முன்னதாக ஐ.பி. எல்லில் றைசிங் பூனே சுப்பபர் ஜயன்டின் உரிமத்தை ஆர். பி.எஸ்.ஜி கொண்டிருந்ததுடன், போர்மியுலா வண்ணின் முன்னாள் உரிமையாளர்களே சி.வி.சி ஆகும்.

### விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகத் தொடர்:

# சம்பியனானது காஞ்சிரங்குடா ஜெகன்



மட்டக்களப்பு - மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட விளாவட்டவான் ராஜா விளையாட்டுக் கழகம், தனது 51ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடாத்திய கால்பந்தாட்டத் தொடரில் காஞ்சிரங்குடா ஜெகன் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

வடக்கு, கிழக்கில் 30 அணிகளை உள்ளடக்கியதாக கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிய விலகல் முறையிலான இத்தொடரின் இறுதி நாளானது கடந்த ஞாயிற்றுக்கிழமை ராஜா விளையாட்டுக்கழக தலைவர் த.தயாபரன் தலைமையில் இடம்பெற்றது.

பிற்பகல் இடம்பெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் சொறிக்கல்முனை சாந்தன் குருஸ் அணியை பெனால்டியில் வென்று ஜெகன் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றதுடன், இரண்டாவது அரையிறுதிப் பண்டாரியாவெளி நாகர் அணியை பெனால்டியில் வென்று போட்டியில் முல்லைத்தீவு உதய சூரியன் அணியும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தன.

இந்நிலையில், இறுதிப் போட்டியில், பெனால்டியில் உதயசூரியன் அணியை வென்று ஜெகன் அணி சம்பியனாகியிருந்தது.

இதேவேளை, மூன்றாமிடத்துக்கான போட்டியில் சாந்தன் குருஸ் அணியை வென்று நாகர் அணி மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டது.

இத்தொடரின் சிறந்த வீரனாக உதயசூரியன் அணி வீரர் எஸ். ஆர்த்தியும், சிறந்த பின்கள வீரனாக உதயசூரியன் அணி வீரர் எஸ். அபியும் தெரிவு செய்யப்பட்ட அதே வேளை சிறந்த கோல் காப்பாளராக ஜெகன் அணியின் பந்து காப்பாளரும் தெரிவு செய்யட்டனர்.

இறுதிப் போட்டிக்கு பிரதம அதிதியாக, கிராமிய, பாடசாலை விளையாளையாட்டு, உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ரவீந்திர சமரவிக்ரம, பொதுஜன பெரமுனவின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் பா. சந்திரகுமார் ஆகியோர் கலந்துகொண்டு வெற்றியாளர்களுக்கான பரிசுகளை வழங்கிவைத்தனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 27 ஒக்டோபர் 2021, இல. 08, ஹுணுப்பிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.